# நிலா

இருமாத இதழ்
இலவச வெளியீடு
5000 பிரதிகள்

வைகாசி - ஆனி 2015 நிலா சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு இல. 33




## பிரான்ஸ் தேசிய பாதுகாப்பு எச்சரிக்கை காலவரையறையற்ற நீட்சியைப்பெறுகிறது!

**1978ம்** ஆண்டு பிரான்ஸ் அதிபர் Valèry Giscard d'Estaing ல் தோற்றுவிக்கப்பட்ட (Plan Vigipirate) தேசிய பாதுகாப்பு எச்சரிக்கை 1991ம் ஆண்டு வளைகுடாப்போரின் போது முதல் முறையாகப் பலப்படுத்தப்பட்டது. பின்னர் 1995ல் பாரிஸ் Port-Royal RER 'B' குண்டு வெடிப்பின்போது அமுல்படுத்தப்பட்ட (Plan Vigipirate) இன்றுவரை அமுலிலேயே உள்ளது. பாதுகாப்பு எச்சரிக்கையின் தீவிரம் கூடிக் குறைந்து வந்துள்ளதே தவிர இந்த இருபது ஆண்டு காலங்களில் முற்றிலுமாக நீக்கப்படவில்லை.

பொது மக்கள் அதிகம் பயன்படுத்தும் பொது இடங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்படும். அத்துடன் பாதுகாப்புத் தகவல் பிரிவினரால் அறியத்தரப்படும் பலவீனமான இடங்களுக்கும் 24 மணிநேர பாதுகாப்புப் பலப்படுத்தப்படும். பொதுவாக காவல்துறையினரும் நிலைமையின் தீவிரத்தைப் பொறுத்து இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமைக்குட்படுத்தப்படுவர்.

பிரான்சில் இடம்பெற்ற ஜனவரி 7 தாக்குதலுக்குப் பின்னர் இத்தேசிய பாதுகாப்பு எச்சரிக்கை (Plan Vigipirate) தனது உச்சத்தைத் தொட்டுள்ளது. பயங்கரவாதத்துக்கு எதிரான இம்முன்னெடுப்பு பொதுவாக குறிப்பிட்ட காலங்களுக்கு பின்னர் கடுமையான உச்சநிலை தளர்த்தப்படும். ஆனால் தற்போது தொடரும் பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பான பாதுகாப்பின்மை நிலவரத்தைக் கருத்தில் கொண்டு காலவரையறையற்ற நீட்சியைப் பெற்றுள்ளது.

பிரச்சினையின் தீவிரம் கூடுதலாக இராணுவத்தினரையும் காவல்துறையினரையும் குறிப்பாக CRS அணியினரையும் காலவரையறையற்ற பணியில் ஈடுபடத்தள்ளியுள்ளது. தற்போது இருபதாயிரத்துக்கும் அதிகமான காவல் துறையினர் ஒவ்வொரு நாளும் பணிக்குட்படுத்தப்படுகின்றனர். குறிப்பாக 10500 இராணுவத்தினர் 830 முக்கிய இடங்களில் 24 மணி நேர பாதுகாப்பில் இருந்து வருகின்றனர். இதில் பாரிஸ் சுற்றுவட்டாரத்தில் மட்டும் 310 இடங்கள் ஆகும்.

அதீத வேலைப்பழு பாதுகாப்புத்துறையினரைச் சோர்வான நிலைக்குத்


2ம் பக்கம் பார்க்க..

பிரான்ஸ்

## பாடசாலைகளில் பழமரங்கள்

பூமிப்பந்து மனிதனுக்கு மட்டுமானது அல்ல தாவரங்களுக்குமானதுதான். குறிப்பாக மனித உயிர்வாழ்விற்கும் பூமியின் சமநிலையைப் பேணுவதற்கும் சூழல் மாசடைவைத் தடுப்பதற்கும் தாவரங்களின் தேவை இன்றியமையாததாகின்றது. இதை குறிப்பாக இளம்பராயத்தினருக்கு, பூமிப்பந்தின் எதிர்கால குடியானவர்களுக்கு உணர்த்த வேண்டியது முக்கியமாகின்றது. இதற்குச் சரியான இடம் பாடசாலைகளே!


இதை உணர்ந்த பிரான்ஸ் அரசு பாடசாலைகளில் பழமரங்களை வளர்க்க திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தை பசுமைக்கட்சியினர் ஊக்குவித்து முன்னகர்த்தி வருகின்றனர்.



பழங்கள் சூப்பர்மார்க்கட்டில் காய்ப்பதாகவே பல நகர்ப்புறத்துகுழந்தைகள் எண்ணுகின்றனர். நகரங்களில் வளரும் குழந்தைகள் பூக்கள், காய்கள், பழங்கள் அவற்றின் வளர்ச்சி முறைகள் பற்றி அறியாமலே வளர்கிறார்கள். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு இளம்பருவத்தினருக்கு ஒரு கல்வி முறையாக இத்திட்டம் கையில் எடுக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக பாரிஸ் 14 பகுதியில் அமைந்துள்ள பாடசாலையில் Pomme, Prune, Abricot, Poiriers என 20 மரங்கள் நாட்டப்பட்டுள்ளது. அவை பூத்துக் காய்க்கும் காலங்களில் அவற்றின் மாற்றங்களை மாணவர்கள் கற்கவும் தாவரங்களை புரிந்து கொள்ளவும் முடியும். பழங்களை வேண்டுமான அளவு எந்தவிதமான கட்டுப்பாடுகளுமின்றி உண்ணவும் முடியும். ஏனெனில் பழங்கள் உடல் நலத்துக்கு கேடு விளைவிக்காது.




நிலா
www.nilafrance.com
தொடர்புகளுக்கு :
சங்கீதா அச்சகம்
Tél: 01 44 72 08 94
sangeethafrance@gmail.com



பிரான்ஸ்

# மே 10 - அடிமைமுறை ஒழிப்புதினம்

உலகெங்கும் நாடுகள் அடிமைப்பட்டதைத் தொடர்ந்து அடிமை முறைகளும், அடிமை வியாபாரங்களும் கோலோச்சிக் கொண்டிருந்தன. இந்த மனித நேயமற்ற செயல்களுக்கு எதிராக மனிதநேயவாதிகள் பலரும் போர்க்கொடி தூக்கினர். 1964ல் அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கன் அடிமை ஒழிப்பு பிரகடனத்திற்கு காற்கோளிட்டார். பலவேறு நாடுகளை காலனித்துவ பிடிக்குள் வைத்திருந்த பிரான்சும் விழித்துக்கொண்டது.

தற்போதைய நீதித்துறை அமைச்சரும், 2002 ம் ஆண்டின் பிரான்ஸ் ஜனாதிபதி வேட்பாளருமான Christiane Taubira அவர்களால் முன்வைக்கப்பட்ட 'Loi Taubira' சட்டமூலம் பிரான்ஸ் பாராளுமன்றத்தில் 10 மே 2001ல் அங்கீகாரம் பெற்றது. இத்தினம் பிரான்சில் அடிமைமுறை ஒழிப்பு தினமாக அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது.

இந்த சட்டமூலத்தினூடாக, பிரான்ஸ் தனது நலன்களுக்காக பிரான்சிலும், தனது காலனித்துவ நாடுகளிலும் கறுப்பினத்தவர்கள், இந்தியர்கள், கரீபியன் மற்றும் அமெரிக்க பழங்குடி மக்கள்மீது மேற்கொண்ட அடிமைவிற்பனை மற்றும் ஏனைய அடிமைமுறைகளை ஒப்புக்கொள்வதாகவும் இது மனிதகுலத்திற்கு எதிரான குற்றமாக தாம் ஏற்றுக் கொள்வதாகவும் பிரகடனம் செய்தது.



10 மே 2015 ம் ஆண்டின் நினைவு தினத்தில் அதிபர் பிரான்சுவா ஹொலந் பிரான்சின் கடல்கடந்த மாகாணங்களில் ஒன்றான Guadeloupe ல் பிரசன்னமாகியிருந்தார். Guadeloupeல் அடிமைகளாகி புதைந்துபோன இலட்சக்கணக்கான மக்களின் நினைவு மையமான Mémorial ACTe அதிபரால் அங்கு திறந்துவைக்கப்பட்டது. 240 மீற்றர் நீளமான இம்மையம் 3 கெக்ரர் நிலப்பரப்பில் 83 மில்லியன் யூரோ செலவில் கட்டப்பட்டது. இம்மையத்தின் ஒருபகுதி காட்சியகமாகவும், ஏனைய பகுதிகள் கலாச்சார செயற்பாட்டு மையங்களாகவும் இயங்கவுள்ளன. வருடத்திற்கு ஒரு மில்லியனிற்கும் அதிகமான வருகையாளர்களை அது பதிவுசெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.



Ségoléne Royal, Christiane Taubira உட்பட பிரான்சின் ஐந்து அமைச்சர்கள், இருபதுக்கும் அதிகமான ஆபிரிக்க மற்றும் மேற்கிந்திய தீவுகளின் அரசியல் தலைவர்கள் நிகழ்வில் பங்குபற்றினர். நிகழ்வில் உரையாற்றிய பிரான்சுவா ஹொலந் "மனிதர்கள் அடிமைகளாக, விற்பனைப்பண்டங்களாக நடாத்தப்பட்ட மனிதநேயமற்ற செயல், எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் மனிதவரலாற்றில் மாற்றி எழுதிவிடமுடியாத துன்பியல் பக்கங்கள்" என பதிவு செய்துள்ளார் ●

சங்கீதா அச்சகம்

39, Bd. de la Chapelle
75010 Paris
M°: La Chapelle
Gare du Nord

sangeethafrance@gmail.com
Tél. / Fax :
01.44.72.08.94

## நம்பிக்கை

எதை இழந்தீர்கள் என்பது முக்கியமல்ல,
என்ன மிச்சம் இருக்கிறது
என்பதே முக்கியம்!

உங்களின்
கோபத்துக்காக வேறு
யாராலும் நீங்கள்
தண்டிக்கப்
படமாட்டீர்கள்.
உங்கள்
கோபத்தாலேயே
நீங்கள்
தண்டிக்கப்படுவீர்கள்!

- புத்தர்



(1ம் பக்கத் தொடர்ச்சி..)

தள்ளியுள்ளது. இதனால் தொடர் மருத்துவ விடுப்பில் செல்வோரின் தொகை அதிகரித்துள்ளது. இவற்றையடுத்து CRS தொழிற்சங்கங்கள் அரசுக்கு கடுமையான அழுத்தங்களைக் கொடுத்து வந்தது. தொடர்ந்த பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் உட்துறை அமைச்சர் நாளாந்த கூடுதல் .உயர்வாக இரண்டு யூரோக்களை அறிவித்திருந்தார். இவ்வறிவித்தல் மேலும் அவர்களை கோபத்துக்குள்ளாக்கியுள்ளது.

தற்போது நாளாந்தம் 30 யூரோக்களாக இருக்கும் இக்கூடுதல் Prime ல் 8 யூரோ உயர்வை CRS தொழிற்சங்கம் கோரியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



# செல்லப்பிராணிகள் வளர்ப்பில் ஐரோப்பியரீதியில் முதலிடத்தில் பிரான்ஸ் !

**பிரான்சில்** 63 மில்லியன் வளர்ப்புப் பிராணிகள் உள்ளதாக கணக்கெடுப்புகள் தெரிவிக்கின்றன, அதேவேளை பிரான்ஸ் மக்கள் தொகை 66 மில்லியன் மட்டுமே! 35 மில்லியன் மீன்கள் தொட்டிகளில் வளர்க்கப்படுகின்றன. 11 மில்லியன் பூனைகள், 7 மில்லியன் நாய்கள் மற்றும் பறவைகள், ஊர்வன என பட்டியல் நீள்கிறது.

பிரான்ஸ் பொருளாதார நெருக்கடிகளுக்கு தொடர்ந்தும் முகம் கொடுக்கிறது. பல வர்த்தக நிறுவனங்கள் நெருக்கடிகளுக்கு ஈடுகொடுக்க முடியாது சரிகின்றன. ஆனால் வளர்ப்பு பிராணிகள்சார் வர்த்தகத்துறையோ இந்த நெருக்கடிகள் எதிலும் சிக்காது நெருக்குவாரங்களுக்கு முகம்கொடுத்து நிமிர்ந்து நிற்கின்றது. 2014ல் மட்டும் 4.5 மில்லியாட் யூரோ வருவாய் ஈட்டியுள்ளதோடு வளரும் பொருளாதாரத்துறையாகவும் இனங்காணப் பட்டுள்ளது.

பிரான்ஸ் மக்களின் செல்லப்பிராணிகள் மீதான காதலுக்கு அளவேயில்லை. அவற்றை தங்கள் குடும்ப அங்கத்தவர்களாகவே கருதிக்கொள்கின்றனர். பூனைகள் மன அழுத்தத்தை குறைப்பவையாகவும், நாய்கள் உடல்நல ஆரோக்கியத்தை ஊக்குவிப்பவையாகவும் கருதுகின்றனர். வளர்ப்புப் பிராணி ஒன்றின் பரிட்சயத்தில் வசிப்பது தமக்கு ஒரு ஆரோக்கியமான அமைதி யான வாழ்வைத்தருவதாக உணருகின்றனர்.

இத்தகைய ஒரு காதலான, மகிழ்ச்சியான பக்கம் இருந்தபோதும் இன்னொரு பக்கம் வீதிகளில் அனாதரவாக விடப்படும் செல்லப்பிராணிகளும், காப்பகங்களும் விழிப்புணர்வுப் பிரச்சாரங்களும் தொடரத்தான் செய்கின்றன.
பிரான்சில் இரண்டிற்கு ஒரு வீடுகளில் செல்லப்பிராணிகள் இராட்சியமே நடக்கிறது..



**பிரான்சில் மக்கள் தேர்தல்களில் வாக்களிப்பது பற்றிய கருத்துக்கணிப்பு** 15 வயதிற்கு மேற்பட்டவர்களிடம் கடந்த ஏப்ரல் மாதம் நடாத்தப்பட்டது. இதில் 1322 பேர் பங்குபற்றினர்.

கருத்துக்கணிப்பில் 56 வீதமானோர் வாக்களிப்பது அவசியம் என கருத்துத்தெரிவித்துள்ளனர்

வாக்களிப்பதோடு மட்டுமில்லாமல் வெற்று வாக்கு அளிப்பதும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என 67 வீதமானோர் கருத்து தெரிவித்துள்ளனர்.

– இக்கருத்துக்கணிப்பை ஜோன் ஜோறெஸ் அறக்கட்டளை(Jean-Jaurès) நிறுவனம் நடாத்தியுள்ளது

## வாக்களிப்பது
### கட்டாயமாக்கப்படவேண்டும்!

பிரான்ஸ் சோசலிசக் கட்சியின் பாராளுமன்றக்குழுத்தலைவர் குளோட் பார்த்தலோன் (Claude Bartolone) கருத்துத் தெரிவிக்கையில் கட்டாய வாக்கெடுப்பு பிரான்சில் அவசியம் என்றும், இது ஒவ்வொரு பிரெஞ்சுப் பிரஜையின் கடமையும் கூட எனவும் தெரிவித்துள்ளார்.




பிரான்ஸ் வாக்களிப்பை கட்டாயமாக்குவது பற்றி ஆலோசிக்கையில் ஏற்கனவே சில நாடுகளில் இது நடைமுறையிலுள்ளன.

கட்டாய வாக்களிப்பை உலகில் முதன்முதலில் கொண்டுவந்தநாடு பெல்ஜியம் ஆகும். இது 1893 ல் நடந்தது.

லக்சம்பேர்க் 1924 இலும், துருக்கி, கிறீஸ், ஒஸ்ரியா என்பன 1919 இலும், சுவிசில் ஒரு மாநிலம் 1896 இலும் கட்டாய வாக்கெடுப்பைக் கொண்டுவந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளாகும்

பெல்ஜியத்தில் அவசிய காரணம் இன்றி கட்டாய வாக்களிப்பில் பங்கு கொள்ளாவிட்டால் முதலாவது முறை எனின் குறைந்தது 27.50 யூரோக்களும், இரண்டாவது முறை வாக்களிக்காவிடின் 137.50 யூரோக்களும் தண்டப்பணம் செலுத்துதல் வேண்டும்.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# அழகுக்குறிப்புகளால்

## ஆபத்தை எதிர்நோக்கும் இளையோர்



தங்கள் உடலை "ஸ்லிம்"ஆக வைத்திருக்க வாலிப வயதினர் படாத பாடு படுகின்றனர். அழகுக்குறிப்புகளுக்காக அவர்கள் இணையத்தை துளாவுதில் அதிகநேரத்தை செலவிடுகின்றனர். இந்தப்போக்கு பிரான்ஸில் ஒரு புதுவிதநோயாக உருவெடுத்து வருகிறது.

தற்போது 30000 இளையோர் பிரான்சில் இந்த நோயின் வலையில் சிக்கியுள்ளதாக மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன. கட்டான மேனிக்கான விளம்பரத்தை அள்ளிவீசுவதில் அமெரிக்க இணையங்களே முன்னணியில் திகழ்கின்றன. அத்துடன் பசியின்மையை உண்டாக்குவதற்கான மருந்துகளை விற்பனை செய்யும் இணைய தளங்களாகவும் இவை செயற்படுகின்றன. பாதிக்கப்படுபவர்களுள் 90 வீதமானோர் பெண்களே! இவர்களுள் 5 வீதமானவர்கள் மரணத்தையும் தழுவிக்கொள்கின்றனர்.
இவ்விதம் இணைய அறமற்று செயற்படும் இணையத் தளங்கள் பிரான்சில் தடைசெய்யப்பட்டு வருகின்றன.









## பிரான்சில் தொலைந்து போகும் கிராமங்கள்



**தற்போது** பிரான்சில் 36664 கொம்யூன்கள் (கிராமங்கள்) உள்ளன. நகர்ப்புறங்களை நோக்கி மக்கள் இடம்பெயர்வதால் கிராமப்புறங்களில் தொடர்ந்து மக்கள் தொகை குறைந்து வருகின்றது. 2020ம் ஆண்டை இலக்கு வைத்து 27000 நகரங்களின் மக்கள் தொகை அதி குறைவான அளவை எட்டவுள்ளதால் புதிய வழிமுறைகள் ஆலோசிக்கப்படுகின்றன.

ஆனால் நாட்டில் உள்ள சனத்தொகையின் 15 வீதமான மக்கள் 75 வீதமான கிராமங்களில் தற்போதும் வாழ்கின்றனர். பிரான்சில் 1000 பேருக்கு குறைவாக வதியும் கிராமங்களின் தொகை தற்போது 27396 ஆக உயர்ந்துள்ளது. இக்கிராமப்புறங்களில் தண்ணீர் விநியோகம், குப்பை கூளங்களை அகற்றல், வீதிகளைச் செப்பனிடுதல் போன்றவற்றில் குறைபாடுகள் காணப்படுகின்றன. ஆனால் நாட்டின் அனைத்துப்பகுதிப் பிரஜைகளிற்கும் சமமான சேவைகள் வழங்கப்படவேண்டுமென பல்வேறு தரப்பினராலும் வலியுறுத்தப்படுகின்றது.

தற்போதைய பிரான்ஸ் அரசியல் நிர்ணய சட்டத்தின்படி கொம்யூன் ஒன்று பிரான்சில் இயங்குவதற்கு, அதி குறைந்த மக்கள் தொகை எவ்வளவு பேர் இருக்க வேண்டும் என்பது தெளிவாக வரையறுத்துச் சொல்லப்படவில்லை.

2020ம் ஆண்டின் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பாக கொம்யூன் ஒன்று இயங்குவதற்கு அதிகுறைந்த மக்கள் தொகை நிர்ணயம் செய்யப்பட்டு, அது அரசியல் சட்டத்தில் சட்டமாக்கப்பட வேண்டும். அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட கொம்யூன்கள் ஒன்றாக இணைக்கப்படல் வேண்டும்.

தற்போது பிரான்சில் 618384 பிரதிநிதிகள் வாக்களிப்பு மூலம் பல்வேறு அமைப்புகளிற்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். அதாவது 104 பேருக்கு ஒருவர் பிரான்சில் தெரிவு செய்யப்படுகின்றார். இத்தொகை சுவீடனில் 256 பேருக்கு ஒருவரும் பிரித்தானியாவில் 2603 பேருக்கு ஒருவருமாக உள்ளனர்.

பிரான்சிலும் வாக்களிப்பவர்களின் மூலம் தெரிவு செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க அரசியல் சட்டத்தில் மாற்றம் கொண்டு வர வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

எங்கள் 15 வருட கால அனுபவம் உங்களுக்கான நிறைந்த சேவையை வழங்குகிறது!

# Autre Vue

OPTICIEN

*Donnez un sens à votre Regard*

Jusqu'à 40% Sur les Montures optiques*
25% Sur les Solaires*

*voir conditions au magasin

## பாரீஸ் மாநகரில் தமிழ் மக்களின் நன்மை கருதி இளைய தலைமுறையின் புதியதோர் உதயம்

சிறியோர் முதல் பெரியோர் வரை சகலவிதமான நவீனரக மூக்குக்கண்ணாடிகள், லென்ஸ் வகைகள் மேலும் பலவிதமான நவீன கோடைகாலக்கண்ணாடி வகைகள் சர்வதேச தரமானதாகவும் மலிவானதாகவும் உங்கள் விருப்பம் போல் தெரிவு செய்து பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே நம்பிக்கையான தமிழர் நிறுவனம் Autre Vue அத்துடன் உங்களுக்கான இலவச ஆலோசனைகள் எப்பொழுதும் வழங்கப்படும்.


**உங்களது தேவை ! எங்களது சேவை !**






## Autre Vue

23 rue lamartine - 75009 Paris
Tél / Fax: 01 53 20 04 10
09 67 33 12 83
email: autrevueparis09@gmail.com







30 வது வருடத்தில்..

# LA GÉODE

**பாரிஸ் 19ல்** அமைந்திருக்கும் Parc de la villette விஞ்ஞான நகர் என பெருமையாக அழைக்கப்படுகிறது. Parc de la villette ல் அமைந்துள்ள அரைக்கோளவடிவ திரையரங்கமான la Géode தனது 30 வது வருட வெற்றிக்களிப்பில் மிதக்கிறது. இது 1985ல் தனது சேவையை ஆரம்பித்ததிலிருந்து இன்று வரை 25 மில்லியன் பார்வையாளர்களைக் கண்டிருக்கிறது. மிகப்பிரமாண்டமான அரங்குகளில் ஒன்றான Géode ல் படம் பார்ப்பதே ஒரு புதிய அனுபவம் தான். ஆயிரம் சதுரமீற்றர் திரை, சாதாரண திரையரங்கத் திரைகளிலும் பார்க்க பத்து மடங்கு பிரமாண்டம். அரங்கம் முழுவதும் திரை, அதில் படர்ந்து விரியும் காட்சிகளை அனுபவிக்க முடியும். இங்கு சாதாரண சினிமாக்களிலும் பார்க்க பிரத்தியேகமாக எடுக்கப்பட்ட இயற்கை, உலகம், விலங்குகள் தொடர் நாம் பார்த்திராத இலகுவில் நாம் பார்க்கமுடியாத ஆவணத்திரைப்படங்களே பிரபல்யம். இங்கு IMAX தரத்தில் திரையிடப் படுகின்றன. இத்தகைய திரையிடல் வசதி உலகிலேயே 400 திரையரங்குகளில் மட்டுமேயுள்ளன.

சாதாரண திரையிடலுக்கு 35 மில்லிமீற்றர் புகைப்படச் சுருளே பயன்படுத்தப்படும். ஆனால் இங்கு 70 மில்லிமீற்றர் படச்சுருள் பயன்படுத்தப்படுகின்றது. செக்கனுக்கு 24 காட்சிகள். 40 நிமிட திரையிடலுக்கு 4 கிலோமீற்றர் புகைப் படச்சுருள். காட்சிகளின் துல்லியத்தைக் கற்பனை செய்துபாருங்கள்! குழந்தைகள் பெரியவர்கள் என எத்தகைய வய–தினரையும் கவர்ந்திழுக்கும் இத்தகைய புதிய அனுபவத்தை நீங்களும் அனுபவிக்க முடியும்.

30வது வருடத்தைச் சிறப்பிக்க 30க்கும் அதிகமான படங்கள் திரையிடப்பட வுள்ளன. டைனோசர்கள், கடல்கள், பூச்சிகள் இயற்கை என புதிய திரை அனுபவத்தைப் பெற முடியும்.

## உயரப்போகும் பாரிஸ்!

பாரிசில் கூரைகளுடன் உள்ள சில கட்டிடங்களில் மேலதிக மாடிகளை அமைக்க பாரிஸ் நகரசபை முன்வந்துள்ளது. இவ்வாறான கட்டிடங்களில் மேலதிகமாக 300 தொடர்மாடிகள் கட்ட அனுமதி வழங்க உள்ளது.



இவ்வாறே மேற்பகுதி தட்டையாக(Flat) உள்ள கட்டிடங்களில் மேலும் ஒரு மாடியில் இருந்து ஐந்து மாடி வரை உயர்த்திக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பாரிஸ் 7, 10, 13, 15 போன்ற வட்டாரங்களில் இத்திட்டத்தின் மூலம் வருடாந்தம் 10000 தொடர்மாடி வீடுகள் நிர்மாணிக்கப்படும்



## பாரிசில் எலும்புக்கூடுகள்!

பாரிஸின் மத்திய பகுதியில் 200 இற்கும் அதிகமான எலும்புக் கூடுகள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. Sébastopol மெத்ரோவிற்கு அருகாமையில் அமைந்துள்ள Monoprix அடித்தளம் விரிவாக்கும் வேலைகளின் போதே இவ் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தற்போது Monoprix கட்டிடம் அமைந்துள்ள இடம் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வைத்தியசாலைக் கட்டிடமாக இருந்துள்ளது. இந்த இடம் Trinité வைத்தியசாலையின் பிணக்கிடங்காகவோ அல்லது கல்லறையாகவோ இருந்திருக்கலாம் என அனுமானிக்கப்படுகிறது. ஆனால் இங்கு ஆய்வாளர்களை அதிர்ச்சிக்குட்படுத்திய விடயம், எலும்புக்கூடுகள் நிரை நிரையாக பல அடுக்குகளில் அடுக்கப்பட்டிருந்தமைதான். இத்தனை மரணங்கள் ஒன்றாக நடந்திருப்பின் என்ன காரணமாக இருக்கக்கூடும் என்ற சிந்தனையும் ஆய்வாளர்களை தொற்றிக்கொள்கிறது. தொற்றுநோய், பஞ்சம் அல்லது வேறு ஏதாவது காரணங்கள் இருக்கமுடியுமா?

18ம் நூற்றாண்டில் இவ்வைத்தியசாலை அழிந்ததோடு இடமும் முற்றாகச் சுத்திகரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இத்தனை எலும்புக்கூடுகளும் கண்டுகொள்ளாமல் விடப்பட்டதற்கான காரணங்கள் தொடர் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு வருகின்றது.

PARIS 2024

une célébration d'une vie

## 2024 – ஒலிம்பிக் போட்டிகள் பாரிசில் நடைபெறுமா?

**ஒலிம்பிக்போட்டிகள்** நடாத்துவதற்காக தொடர்ந்து நான்காவது முறையாக பாரிஸ் தனது விண்ணப்பத்தை தாக்கல் செய்யவுள்ளது. முதல் மூன்று தடவைகளும் 1992ல் பார்சலோனாவிடமும், 2008 ல் பேக்கனிடமும்(Pékin) 2012ல் லண்டனிடமும் தெரிவுகளை இழந்திருந்தது. இந்த நான்காவது எத்தனிப்பை தக்க வைப்பதற்காக கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

ஒலிம்பிக் போட்டிகள் நடாத்துவதற்கான சகல தகுதிகளும் பாரிஸ் நகருக்கு உள்ளது எனத் தெரிவித்த பாரிஸ் நகர மேயர் Anne Hidalgo ஒலிம்பிக் என்னும் மஜிக் நிகழ்வு பாரிசில் நடைபெறும் வரை எத்தனை தோல்விகள் வந்தாலும் பிரான்ஸ் மக்களின் அபிலாசைகளுக்காக தொடர்ந்து போராடுவேன் எனத் தெரிவித்துள்ளார். பாரிசில் 1900 மற்றும் 1924ல் போட்டிகள் நடைபெற்றாலும் இது ஒரு நீண்ட காத்திருப்புத்தான். தற்போது பாரிஸ் நகர ஆலோசனைக்குழுவின் ஒப்புதல் வாங்கிவிட்ட நிலையில் விண்ணப்பம் 15 செப்டெம்பர் அனுப்பப்பட்டு 2017 கோடை காலத்தில் ஒலிம்பிக் குழுவினரால் முடிவுகள் அறிவிக்கப்படும். தற்போதய அறிவிப்பின்படி செலவுகளாக 4 முதல் 6 மில்லியாட் யூரோக்கள் கணக்கிடப்பட்டுள்ளது. இருப்பினும் நடந்து முடிந்த 2012 லண்டன் போட்டிகளுக்கு 5 மில்லியாட் யூரோக்கள் கணக்கிடப்பட்டு 11 மில்லியாட் யூரோக்கள் செலவாகி யதாக குறிப்பிட்ட பசுமைக்கட்சியினர் பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.




## முடிவுக்கு வந்த Autoroute இழுபறி

பிரான்சில் பல மாதங்களாக அரசுக்கும் Autoroute கட்டுமான மற்றும் நிர்வாக நிறுவனங்களுக்கும் இடையிலான இழுபறிகள் ஒரு வழியாக முற்றுக்கு வந்துள்ளன.

பிரான்சின் 11882 கிலோமீற்றர் (Autoroute) நெடுஞ்சாலைகளில் 9048 கிலோமீற்றர் நெடுஞ்சாலைகளை கட்டுமான நிறுவனங்களே கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன. Péage களை நிர்வாகம் செய்யும் இந் நிறுவனங்கள் கட்டண உயர்வுகளை தொடர்ந்து அமுல்படுத்தியே வருகின்றன. 2004 முதல் 2014 வரையான காலப்பகுதியில் Péage கட்டணங்கள் வருடத்துக்கு 2 சதவீத உயர்வுகளைச் சந்தித்து வந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. அரசுக்கும் இந்நிறுவனங்களுக்குமான முரண்பாடுகள் வருட ஆரம்பத்தில் விலையுயர்வுகளை அறிவித்த போது ஆரம்பமாகியது. தனது உடனடி எதிர்ப்பைப் பதிவு செய்த சுற்றுச்சூழல் அமைச்சர் செகொலன் றோயல், Autoroute களை நிர்வாகம் செய்யும் நிறுவனங்கள் மக்களின் பணத்தை கொள்ளையடிக்கின்றன எனத் தெரிவித்து அரசை உடனடி நடவடிக்கைகள் எடுக்கக் கோரினார். Péage கட்டண உயர்வுகளுக்கு தாங்கள் சமர்ப்பித்த புதிய கட்டுமான ஒப்பந்தக் கோப்புகளை அரசு கிடப்பில் போட்டதும், தங்களின் Péage நிர்வாக ஒப்பந்தங்களை அரசு ரத்துச் செய்ய முனைந்தமையுமே காரணங்களாகும் என Autoroute நிர்வாகத்தினர் தெரிவித்திருந்தனர்.
நீண்ட பேச்சுவார்த்தைகள் பிரதமர் மனுவல் வால்சினால் சமரசத்துக்குக் கொண்டு வரப்பட்டன. 2015 மற்றும் 2016 ற்கான கட்டண உயர்வுகள் நிறுத்தப்பட்டுள்ளன. அரசு இதற்குக் கைமாறாக கிடப்பில் கிடந்த 3,2 மில்லியாட் யூரோக்கள் பெறுமதியான கட்டுமான ஒப்பந்தங்களுக்கு அனுமதியும் மேலும் இரண்டு வருடங்களுக்கான ஒப்பந்த நீட்சியும் வழங்கியுள்ளது.

### செல்வி சேர்ஜியா மகேந்திரன் பிராந்திய தேர்தலில் வெற்றி

கடந்த 2015 மார்ச் 22–29 ம் திகதிகளில் நடைபெற்ற பிரான்சின் பிராந்திய நிர்வாக சபைகளுக்கான தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களில் இலங்கை தமிழ் குடும்பத்தை சேர்ந்த செல்வி சேர்ஜியா மகேந்திரனும் ஒருவர். இவர் கார்ஜ் லெ



கோணேஸ், ஆர்னோவீல் எனும் கிராமங்களின் நிர்வாக சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரின் வெற்றியை வாழ்த்தி பாராட்டுவைபவம் 26.04.2015 மாலை கார்ஜ் லெ கோணேசில் நடைபெற்றது. இவ்வைபவம் கார்ஜ் லே கோணேஸ் வாழ் தமிழர்களால் ஒழுங்கு செய்யப்பட்டது.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# மலிவு விலையில் தொலைபேசி அட்டைகள்



- புதியவகைத் தொலைபேசிகள் உத்தரவாதத்துடன் குறைந்த விலையில் விற்கப்படும்
- எல்லா வகை கையடக்க தொலைபேசிகளுக்குமான உதிரிப்பாகங்கள் இங்கு விற்கப்படும்
- கைத்தொலைபேசிகள் பழுது பார்க்கப்படும், மற்றும் அனைத்து ரக தொலைபேசி அட்டைகளும் ஏனைய கடைகளிலும் விட குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்



Ria
Worldwide Money Transfer

வெளிநாடுகளுக்கு குறைந்த செலவில் பணம் விரைவாக அனுப்பி வைக்கப்படும்.

## மீண்டும் புதிய சேவைகளுடன்

# சித்தி விநாயகா ஆடையகம்






# சித்தி விநாயகா அழகு நிலையம்

- உங்கள் அழகை மேலும் மெருகூட்ட மணமகள், தோழிகள் அலங்காரம் சிறந்த முறையிலும் குறைந்த செலவிலும் செய்து கொடுக்கப்படும்
- நறுமணங்கள் கொண்ட இயற்கையான பூக்களோடு மணமாலை, நாகசடம் செய்து கொடுக்கப்படும் மற்றும் மணப் பெண் நகைகள் வாடகைக்கு கொடுக்கப்படும்
- நவீன முறையில் **Hair Style** செய்யப்படும் கொண்டாட்டங்களுக்கு செல்பவர்களுக்கும் மேக்கப் **Hair Style** மற்றும் சாறி கட்டிவிடப்படும்.
- அழகுக்கு மேலும் அழகு சேர்க்கும் வகையில் மருத்துவர்களால் தெரிவு செய்யப்பட்ட கிறீம் வகைகளும் விற்பனைக்குண்டு
- மேலும் ஐப்ரோ, முகப்பரு, பிளீச்சிங், பெடிகியூர், மனிக்கியூர், வக்ஸிங், கோல்டன் பேசியல், பிரைட்டன் மேக்கப், கரும்புள்ளிகளை நீக்குதல் ஆகியவை சிறந்த முறையிலும் குறைவான செலவிலும் செய்து தரப்படும்

## பெண்கள் மற்றும் ஆண்களுக்கான அனைத்து ஆடைகளும் தைத்துக் கொடுக்கப்படும்






**56, rue Philippe de Girard 75018 Paris**
**Métro : La Chapelle** *(En face de Temple Ganesha La Chapelle)*

**56, rue Philippe de Girard 75018 Paris**
(Métro : La Chapelle) ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்திற்கு முன்பாக

# எச்சரிக்கை! Javel




அன்றாட வீட்டுச் சுத்திகரிப்புகளுக்கு ஜவல் (Javel)ன் தேவை இன்றியமை யாதது என்பது பொதுவான கருத்தே. பிரான்சில் பத்தில் ஏழு குடும்பத்தினர் அன்றாடம் ஜவலை உபயோகப்படுத்துகின்றனர். குழந்தைகள், சிறார்கள் உள்ள வீடுகளில் ஜவலினை உபயோகிப்பதனால் இளவயதினருக்கு கண், காது, மூக்கு மற்றும் சுவாச நோய்கள் ஏற்படுவதற்கான அபாயங்கள் அதிக முள்ளதாக அமெரிக்க மருத்துவ ஆராய்ச்சி மையம் (CEH) தெரிவித்துள்ளது. சாதாரண காய்ச்சல் வருவதற்கான சாத்தியக்கூறுகள் கூட 20 சதவீதம் அதிகமாகவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

பின்லாந்து, ஸ்பெயின், ஒல்லாந்து ஆகிய நாடுகளில் ஆறிலிருந்து பன்னிரண்டு வயது வரையான 9102 இளவயதினர் மேல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையிலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது.

ஜவலில் இருந்து வெளியாகும் வேதி யல் கூறுகள் குழந்தைகளின் சுவாச நாளங்களைத் தாக்குகின்றன. அத்துடன் அவை குழந்தைகளின் நோய் எதிர்ப்பு சக்தியையும் குறைத்து விடுகின்றன எனக் குறிப்பிட்ட ஆராய்ச்சியாளர்கள் தற்போதைய சூழலில் இது ஒரு தீவிர சுகாதாரப் பிரச்சினையாக எழுந்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஜவல் மட்டுமல்ல ஜவல் சேர்க்கப்பட்ட மற்றைய சுத்திகரிப்புப் பொருட்களும் இத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியவையே எனவும் அச்சுறுத்துகின்றனர்.

பிரான்சில் வருடத்துக்கு 245 மில்லியன் லீட்டர் ஜவல் விற்பனையாகின்றது. இலகுவாக சகல நுண் கிருமிகளை யும் அழிக்க வல்லது போன்ற ஜவலுக்கான விளம்பரங்களின் பின்னால் காலம் காலமாக பிரா ன்ஸ் குடும்பங்கள் கட்டுண்டு கிடக்கின்றன.

ஜவலுக்கான மாற்றுச் சுத்திகரிப்பு பொருட்களை கண்டறிவதில் குழப்பங்களே நிலவி வருகின்றபோதும் சூழலுக்கு மாசு விளைவிக்காத ஜவலுக்கு ஒத்த திறனுடைய பசுமைச்சான்றிதழ் பெற்ற பல சுத்திகரிப்பு பொருட்கள் தற்போதைய வியாபாரச் சந்தையில் கிடைக்கின்றன என்பதையும் அவர்கள் தமது ஆய்வில் வெளிப்படுத்தத் தவறவில்லை.

## அடுத்த மூன்று வருடங்களில் பத்தாயிரம் வேலைவாய்ப்புகள்!





**பிரான்சின்** பல்பொருள் அங்காடிகளுள் ஒன்றான E.Leclerc நிறுவனம் தனது விரிவாக்கத்திற்காக அடுத்த மூன்று வருடங்களில் 1 மில்லியாட் யூரோக்களை செலவிட திட்டமிட்டுள்ளது. இதன் நிமித்தம் பத்தாயிரம் மேலதிக வேலை வாய்ப்புகளையும் வழங்க உத்தேசித்துள்ளது.

1949ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் தற்போது 45.7 மில்லியாட் (4570 கோடி) யூரோ பெறுமதி யான வர்த்தகத்தை வருடாந்தம் செய்துவருகின்றது. மேலும் 94000 ஆளணி வளத்தைக் கொண்டிருக்கும் இந்நிறுவனம் அடுத்த மூன்றாண்டுகளில் ஒரு இலட்சத்தை தாண்டவுள்ளது.

E.Leclerc நிறுவனத்தின் பெருமைபேசும் அதன் இயக்குனர் நாயகம் மிசல்–எது–வார் லுக்கிளெர், தற்போது பிரான்சில் கபூர், இன்ரர்மார்சே, சிஸ்ரம் 4 போன்ற முன்னணி நிறுவனங்களிற்குப் போட்டியாக திகழும் E.Leclerc எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் வாஷி ங்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் Amazon நிறுவனத்திற்குத்தான் போட்டியாளராக இருக்கும் என்கிறார்.

## கான் திரைப்படவிழாவில் தீபன்






68வது கான் சர்வதேசதிரைப்பட விழாவில் பிரான்சின் முன்னணி இயக்குனர் Jacques Audiard ன் இயக்கத்தில் தீபன் என்ற படம் தெரிவாகியிருக்கிறது. ஈழத்தமிழ் அகதிக்குடும்பமொன்றின் கதையை முன்னிலைப்படுத்தி தயாரிக்கப்பட்ட இப்படத்தில் பிரபல எழுத்தாளர் ஷோபாசக்தி முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறார்.
Jacques Audiard பல சர்வதேச திரைப்படவிருதுகளை வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**பிரான்ஸ் - மாதகல்**
**நலன்புரிச்சங்கத்தின்**
வருடாந்த விளையாட்டுப்போட்டி
**28.06.2015**
PARIS PTE DE DORE
(வழமையான இடம்)

**பொருட்களைவிடவும் நல்ல மனிதர்களை சம்பாதியுங்கள்!**



**மனதின் கட்டுப்பாடு** உடலையும்,
அதில் எழும் **நல்ல எண்ணங்கள்**
உள்ளத்தையும் பலப்படுத்துகிறது.
**நேர்மையான நடத்தை** உங்களுக்கு மட்டுமின்றி
மற்றவர்களுக்கும் சமாதானத்தை வழங்கும்.
- புத்தர் -

ஸ்ரார் ஸ்ரீ யின் இசையில்
**திருக்குறள் குறுந்தகடு வெளியீடு**
**24. 05. 2015**
68, Av. du Président Wilson
93210 La Plaine St.Denis

## பிரான்ஸ் தமிழர் நிகழ்வுகள்



### ● நினைவு ஒன்றுகூடல்

தோழர் கலைச்செல்வனின் 10 வது ஆண்டு நினைவாக இலக்கியஒன்றுகூடல் 28.03.2015 அன்று பாரிசில் நடைபெற்றது.



### ● தாமோதரகானம்

சாவகச்சேரி இந்துக்கல்லூரி பிரான்ஸ் பழையமாணவர் சங்கத்தின் தாமோதரகானம் 29.03.2015 அன்று பாரிசில் நடைபெற்றது.

### ● அமுதவேளை

93 தமிழர் விளையாட்டுக்கழகத்தினரால் அமுதவேளை நிகழ்வு 05.04.2015 அன்று பாரிசில் நடத்தப்பட்டது.

### ● புனித பத்திரிசியார் தினவிழா

யாழ் புனித பத்திரிசியார் பிரான்ஸ் பழையமாணவர் சங்கத்தின் புனித பத்திரிசியார் தினவிழா 12.04.2015 அன்று பாரிசில் நடைபெற்றது.



### ● கலாவிநோதன் சின்னமணி

கலாவினோதன் சின்னமணி அவர்களின் அஞ்சலி நிகழ்வு 12.04.2015 அன்று இவ்றியில் நடைபெற்றது.

### ● வாணிதாசனார்

வாணிதாசன் முத்தமிழ் மன்றத்தினால் கவிஞரேறு வாணிதாசனார் நூற்றாண்டு விழா 19.04.2015 அன்று பாரிசில் நடைபெற்றது.

### ● தாய்மண்ணே வணக்கம்

தமிழ் மக்கள் பேரவையின் ஆதரவில் தாய்மண்ணே வணக்கம் நிகழ்வு 26.04.2015 அன்று செவ்றோனில் நடைபெற்றது.

### ● மன்னார் அபிவிருத்தி அமைப்பு

மன்னார் மாவட்ட அபிவிருத்தி அமைப்பின் வருடாந்த ஒன்றுகூடலும் சீட்டிழுப்பும் 10.05.2015 அன்று பாரிசில் நடைபெற்றது.



### ● அஞ்சலி

அண்மையில் கொலைசெய்யப்பட்ட செல்வி. வித்தியா சிவலோகநாதனின் அஞ்சலிநிகழ்வும் கண்டனக்கூட்டமும் 17.5.2015 அன்று பாரிசில் நடைபெற்றது.





**மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய இணைய முகவரி**


www.thiruvenkadumandaitivu.com




ஆர்மேனியா

மக்கள் தொகை 33 இலட்சம்.
பரப்பளவு 29800 சதுர மீற்றர்.
கிறிஸ்தவ மதத்தை அரசமதமாக ஏற்ற முதல் நாடு (301ம் ஆண்டு)
எல்லை நாடுகள் : துருக்கி, ஈரான், ஜோர்சியா, அஜர்பை ஜான்

## நிலா குறுக்கெழுத்துப் போட்டி - 17




**இடமிருந்து வலம்**

1. உலக இலக்கியங்களில் ஒன்று (6)
4. பசியிருந்தால் இது தெரியாது என்பர் (2)
5. அரசனின் ஆலோசகன் (4)
6. இந்த நாளில் கடும் இருட்டாக இருக்கும் (4) (மாறியுள்ளது)
7. பார்வதியின் மறுபெயர் (6)
10. மதுரையை எரித்த காவியநாயகி(4)
12. நடிகர் திலகத்தின் முதலாவது படம் (5) (குழம்பியுள்ளது)
13. இவளை ஒரு மின்சாரம் என்கிறார்கள் (5) (குழம்பியுள்ளது)
14. ஈழத்து வில்லிசைப்புலவர் (5)
15. இது ஒரு வகை ஒட்டுண்ணி (2)

**மேலிருந்து கீழ்**

1. முருகக்கடவுளை புகழ்ந்து அருணகிரிநாதரால் பாடப்பட்டது (6)
2. ஏழைகளின் உறைவிடம் (3)
3. வாய்மைக்கு இலக்கணமான வரலாற்று நாயகன் (8)
8. நிறம் (4)
9. இது ஒரு ராசி (4)
11. ஊர் (4) (குழம்பிக்கிடக்கிறது)

✔ உங்கள் பதில்களை 10 ஆடி 2015 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்
சரியான விடை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள் !

நிலா குறுக்கெழுத்துப்போட்டி இல.16ல் பரிசு பெறுபவர்கள்.

1. சந்திரிகா (Paris 13)
2. நகுலேஸ்வரன் (Paris 18)
3. பிரபாகரன் இராசையா (Montreuil)

**சரியான விடை எழுதியவர் :**

● கஜேநதினி கமலகாந (Louvres)

**பரிசில்களை சங்கீதா அச்சகத்தில் நேரில் வந்து நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்!**
சரியான விடையை அனுப்பியவர்களின் முழு விபரங்களையும் www.nilafrance.com இல் பார்க்க முடியும்.

**• அனுப்ப வேண்டிய முகவரி •**
**NILA,** 39, Bd. de la Chapelle - 75010 PARIS

## ஆர்மேனிய இனப்படுகொலை!

### நூற்றாண்டு நிகழ்வில் பிரான்ஸ் ஜனாதிபதி

*15 இலட்சம் ஆர்மேனிய மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட முதலாவது நூற்றாண்டு நிகழ்வு ஆர்மேனிய தலைநகர் எறெவான்(Arevan) ல் 24 ஏப்ரல் 2015 இல் நினைவுகூரப்பட்டது. இந் நிகழ்வில் பிரான்ஸ், ரஷ்ய ஜனாதி–பதிகளும் கலந்து கொண்டனர்*

கொடூரச் செயல்கள் நடைபெற்றுள்ளன என்பதை ஏற்றுக்கொண்ட துருக்கி, கிறிஸ்தவ ஆர்மேனிய மக்கள் திட்டமிட்ட முறையில் அழிக்கப்படவில்லை எனவும் துருக்கியின் ஒட்டோமன் (Ottoman) சாம்ராஜ்ய காலகட்டத்தில் இடம்பெற்ற கொலைகளை இரு இனங்களிற்கிடையான கசப்பான உறவுகளின் விளைவு எனவும் இது இனப்படுகொலை இல்லை எனவும் வாதிடுகிறது.

இதேவேளை துருக்கியும் யுத்தம் ஆரம்பித்த நூற்றாண்டு தினத்தை அதேநாள் ஏப்ரல் 24 அன்று கொண்டாடியது. கொடுமைகள் நடந்துள்ளன என்பதை ஏற்றுக்கொண்டுள்ள துருக்கி அங்கு துருக்கி முஸ்லிம்களும் கொல்லப்பட்டுள்ளனர் என்பதையும் நினைவுகூருகிறது.

பிரான்ஸ் ஜனாதிபதி தனதுரையில் இடம்பெற்ற கொடுரச்செயல்களை இனப்படுகொலைகள் என வர்ணித்தோடு உங்களுடைய மக்கள் எதிர்நோக்கிய துன்பங்களை நாங்கள் ஒருபோதும் மறவோம் எனவும் தெரிவித்துள்ளார். ரஷ்ய ஜனாதிபதி புட்டின்



உரையாற்றும்போது இது உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கிய மனித இனத்திற்கு ஏற்பட்ட மாபெரும் அழிவு என்றார். அமெரிக்க ஜனாதிபதி வாஷிங்டனில் இருந்து கருத்து வெளியிடுகையில், இனப்படுகொலை என்ற கருத்தை தெரிவிப்பதைத் தவிர்த்து 20ம் நூற்றாண்டில் இடம்பெற்ற மிகக் கொடுமையான நிகழ்வுகளில் ஒன்று எனக்குறிப்பிட்டார்.

உலகத்தலைவர்கள் பல்வேறு பட்டரீதியில் கருத்துத் தெரிவித்திருப்பினும் உலகெங்கும் பரந்து வாழும் ஆர்மேனிய மக்கள், நூறாண்டுகள் கடந்துவிட்டநிலையிலும் கொலைசெய்யப்பட்ட தங்கள் மக்களை நினைவுகூர்ந்துள்ளனர்.



சின்னட்டிக்கதை

# விளையாட்டு

**எனக்கு** அப்போது வயது பத்து. பக்கத்து வீட்டு லவனுக்கு வயசு 9. ஒரு வயதுதான் கூடஎன்றாலும் நான் கொஞ்சம் பெரிய ஆள்மாதிரி. என்னுடைய பயம் நடுக்கம் எல்லாம் எனக்குமட்டும்தான் தெரியும்.

எங்கள் பாடசாலை ஒருமைல் தொலைவில் இருந்தது.
லவனுக்கு பாதுகாவலன் நான் தான். அவன் என்னோடு பாடசாலை வந்து என்னோடு திரும்பவேண்டும்.
"தம்பி ராசா லவனை பத்திரமாய் கூட்டிக்கொண்டு போய் பத்திரமாய் கூட்டிக்கொண்டு வாடி " என்று செல்லமாய் லவனின் அம்மா கெஞ்ச எனக்கும் பெருமையாத்தான் இருந்தது.
நானும் "ஓம் ஓம்" என்று நல்லாய்த் தலையையாட்டி விட்டு லவனின் கை பிடித்து நடந்தேன்.

வீட்டிலிருந்து இரண்டு முடக்கு திரும்பமுதல் நான் தொடங்கிவிடுவேன்.

"ஐஸே! அங்க..அங்க வடிவா...வடிவாக் கேளும்.."
அவன் காதைத்திருப்பி வடிவாய் உற்றுக் கேட்பான்.
"வடிவாக் கேக்குதல்லே! வடிவாக்கேளுமைஸே!"
லவனும் ஓம் என்பது போல என்னைப்பார்ப்பான்.
எனக்கு உசார் வந்துவிடும்.
"..ஐய்..யை..யோ..உம்மட அம்மான்ர குரல் போல கிடக்கு" என்பேன் – முழுசியபடி.
லவனும் முழுசுவான். அவனுடைய அப்பா நியூசிலாந்தில் வேலை பார்த்தார்.
அவன் ஒரே பிள்ளை. செல்லமாய் வளர்ந்தவன். சரியான ஒரு அப்பிராணி.
நானும் அப்பிராணி தான். ஆனாலும் என்னவிட ஒரு அப்பிராணி மாட்டுப்படேக்க என்னால விட முடியேல்ல.
நான் நல்லா அவனோட விளையாடினன்.

அவன் வெருள வெருள எனக்கு விளையாட்டுக்கூடிச்சுது.
"வடிவாக் கேளுமைஸே! யாரோ கள்ளன் வந்து அம்மாவை கத்தியாலை குத்திறான் எண்டு நினைக்கிறன்..."

லவன் மெதுவாய் விம்மத் தொடங்கினான்.

எனக்கு அடங்கேல்ல.
கேட்டுவைச்சிருந்த கள்ளற்ற கதையெல்லாத்தையும் துப்பறியும் கதைபோல அவன்மேல அடுக்கினன்.
அவன் பயந்து வெருண்டு அழுதுகொண்டு திரும்பி வீட்டை ஓடினான்.
எனக்கு பயம் வந்திட்டுது.
நான் கலைச்சுப்பிடிச்சு "இல்ல ஐஸே... இல்ல ஐஸே! நான் சும்மா பகிடிக்கு. . " என்று அவனை சமாதானப்படுத்தி கெஞ்சாத குறையாய் கூட்டி வந்து விடுவேன்.
திரும்பவும் நாலு முடக்கு திரும்ப தொடங்கிவிடுவேன்.
அவனும் அழுதுகொண்டு திரும்ப ஓடத்தொடங்குவான்.
நான் திரும்பவும் சமாதானப்படுத்தி கூட்டிவந்துவிடுவேன்.
இதை நான் வெகு சாமர்த்தியமாய் செய்துகொண்டிருந்தேன்.

இது ஒரு நாள் மட்டுமல்ல ஒவ்வருநாளும்தான் நடந்தது.
எனக்கும் நல்ல பொழுது போக்காய் இருந்தது.

ஒரு நாள் அவன் தாயிடம் சொல்லிவிட்டான்.
தாய்க்கு என் மீது நல்ல மதிப்பும் நல்ல நம்பிக்கையும் இருந்தது. ஆனால் நான் நல்ல நடிகன் என்பதுமட்டும் அவவுக்குத் தெரியாது.

"அய்யோ அன்ரி நான் சும்மா லவனோட விளையா–டுறது..." என்றதும் அவ சிரிச்சுக்கொண்டு "அதுதானே! என்ர பிள்ள அப்பிடிச்செய்யுமே!" எண்டு என்ர முதுகில தட்டி விட்டா.
ஆனாலும் நான் விட்டேனா! என்ர விளையாட்டுத் தொடரத்தான் செய்தது. எனக்கு அது நல்ல குஷியாக இருந்தது.

❍

**என்னுடைய** மகனுக்கு இப்போது வயது பத்து.
அவன் நித்திரையில் திடுக்கிட்டு எழுந்து கேவிக்கேவி அழுகிறான்.
முந்தி மாதிரி எல்லாம் அவன் சிரிப்பதில்லை.
விளையாடுவதில்லை.
தனிச்சிருக்கிற வேளைகளில் விம்முகிறான்.
"ஏன்ராசா என்னசெய்யுது பிள்ளைக்கு" என்று கேட்டால் ஒன்றும் சொல்கிறானில்லை.

ஒரே ஒரு ஆம்பிளப்பிள்ளை. எவ்வளவு செல்லமா வளத்தம்.
எனக்கு இதயம் சோர்ந்தது.
இதைப்பற்றி மனைவியோட கதைக்கவும் பயமாக இருந்தது. நான் ஒன்றைச்சொல்ல அவள் இன்னொன்றாய் யோசித்து கவலைப்படுவாள்.

இப்ப ஒரு கிழமையாய் ஆகாஷ் புதிய பாடசாலைக்குப் போகிறான்.
தூர உள்ள பாடசாலை. எனக்கும் கூட்டிபோக வசதி வாய்க்கவில்லை. பக்கத்து வீட்டு டாவித்தோடுதான் போய் வருகிறான். டாவித்துக்கு பதினொரு வயசு.
அவனும் என்னைப்போலவே நல்ல கெட்டிக்காரன்.

எனக்கு தலையெல்லாம் விறைத்தது. ப்றெஷர் கூடுவது போலவும் மயக்கம் வருவதுபோலவும் இருந்தது. உடல் வியர்த்தது.
அப்படியே நிலத்தில் சாய்ந்தேன்.
ஆகாஷ் கிட்டவந்தான். மெதுவாய் என்தோளில் கைபோட்டு "அப்பா" என்றான். நான் அவனை கட்டி அணைத்தேன். லவன் எனக்குள் கிடந்தான். இதயம் உருகி எனக்குள் கசிந்துகொண்டிருந்தது...

• அசோகா 24.03.2015





இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# துயர் பகிர்வு


வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்



அமரர்
**முத்தையா ஈஸ்வரம்**
(யாழ். இளவாலை, பிரான்ஸ்)
தோற்றம் : 16. 07. 1932
மறைவு : 14 . 03. 2015



அமரர்
**நடராசா அரியமலர்**
(யாழ். அச்சுவேலி, பிரான்ஸ்)
தோற்றம் : 20. 02. 1949
மறைவு : 06. 04. 2015



அமரர்
**அப்பச்சி நற்குணசிங்கம்**
(யாழ். அளவெட்டி, பிரான்ஸ்)
தோற்றம் : 10. 03.1929
மறைவு : 22. 04. 2015

அமரர்
**கறோலிஸ் ஜோன்சன்**
(யாழ். நாரந்தனை, பிரான்ஸ்)
தோற்றம் : 21. 06. 1961
மறைவு : 22. 03. 2015



அமரர்
**சிங்கராஜா சிவகுமார்**
(வேலணை, பிரான்ஸ்)
தோற்றம் : 20. 06.1969
மறைவு : 06. 04. 2015



அமரர்
**முருகானந்தம் அபிராமி**
(பிரான்ஸ்)
தோற்றம் : 05. 05. 1989
மறைவு : 22. 07. 2001





அமரர்
**எட்வேட் வில்சன்**
(யாழ். பருத்தித்துறை, பிரான்ஸ்)
தோற்றம் : 19. 02. 1972
மறைவு : 25. 03. 2015



அமரர்
**கணேஸ் நவீந்திரன்**
(பிரான்ஸ்)
தோற்றம் : 30. 06. 1964
மறைவு : 13. 04. 2015



அமரர்
**பொன்னுத்துரை ஜெயராஜா**
(ஜேர்மனி)
தோற்றம் : 02. 03. 1956
மறைவு : 06 . 04. 2015

அமரர்
**விநாயகமூர்த்தி முருகானந்தம்**
(பிரான்ஸ்)
தோற்றம் : 07. 03. 1957
மறைவு : 27. 03. 2015



அமரர்
**நீக்கிலாஸ் தேவராஜா**
(மன்னார், பிரான்ஸ்)
தோற்றம் : 08. 10. 1969
மறைவு : 12. 04. 2015





அமரர்
**செல்வரட்ணம் பிரேம்குமார்**
(யாழ். உரும்பிராய், பிரான்ஸ்)
தோற்றம் : 21. 05. 1975
மறைவு : 28. 03. 2015



அமரர்
**விசுவலிங்கம் பாஸ்கரநாதன்**
(அளவெட்டி, பிரான்ஸ்)
தோற்றம் : 15. 04. 1949
மறைவு : 19 . 04. 2015

அமரர்
**ஐயாத்துரை நரேந்திரன்**
(யாழ். தச்சன்தோப்பு, பிரான்ஸ்)
தோற்றம் : 18. 06. 1966
மறைவு : 03. 04. 2015




அமரர்
**அருணாசலம் கிருஷ்ணபிள்ளை**
(மூளாய், தொல்புரம்)
தோற்றம் : 19. 01. 1939
மறைவு : 15. 04. 2015



## இல்லாமல்போன அப்பாவுக்கு!
## தந்தையர் தினவாழ்த்துக்கள்

*வரலாற்று நாயகர்போல்*
*பல வெற்றிகளைக்*
*குவித்தவரல்ல*
*என் தந்தை - ஆனாலும்*
*என் நாயகன் அவர்தான்*
*வெற்றிமட்டும்*
*வாழ்க்கையல்ல என்று*
*கற்றுத்தந்தவர் அவரல்லவா!*
– சுரேஷ்



## CMU-C மோசடிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை!

**பிரான்சில்** வறுமைக் கோட்டின்கீழ் வாழ்வோருக்கான மருத்துவக்காப்புறுதி மற்றும் மேலதிக உதவிகளை சிலர் தவறான ஆவணங்களை சமர்ப்பித்து பெற்றுக்கொள்வதாக CMU-C காப்பீட்டு நிறுவனம் கருதுகிறது.

இதனைக் கட்டுப்படுத்த இனிவரும் காலங்களில் இந்நிறுவனம் புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளது. அதிகாரிகள் CMU பயனாளர்களின் வங்கி கணக்குவரை கண்காணிக்க வாய்ப்புள்ளது.

போதிய வருமானமற்றோர் மற்றும் குடும்பங்களிற்கே இம் மேலதிக உதவி வழங்கப்படுகிறது. தனிநபர் ஒருவர் 720யூரோவிற்கு குறைவாகவும், கணவன் மனைவி இருவரும் இணைந்து 1080 யூரோவிற்கு குறைவாகவும் வருமானம் பெறுவோராயின் அவர்கள் இவ் உதவிக்கு விண்ணப்பிக்க முடியும்

**அன்பு நிறைந்த ஒருவர்,**
**மனிதர் படும் துன்பங்களைக்**
**காட்டிலும், விலங்குகள்**
**படும் துன்பத்தைச் சகித்துக்**
**கொள்ளமாட்டார்.**
- ரோமெயின் ரோலந்து-



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# ஐந்தாண்டுகளில் பாரிஸ் மிதிவண்டிகளில் மிதக்கும்!



ஐரோப்பாவில் தற்போது மிதிவண்டி பயணத்தில் அம்ஸ்ரடம்(Amsterdam-Holland) நகரே முதலிடம் வகிக்கிறது. எதிர் வரும் ஐந்து ஆண்டுகளுள் பாரிஸ் நகர் மிதிவண்டி சாம்ராஜ்ஜியமாக மாறும் சாத்தியம் உள்ளது. இதற்கான முன்னெடுப்புகளை பாரிஸ் நகரின் இணை நகரபிதா கிறிஸ்தோப் நஜ்டோவ்ஸ்கி (Christophe Najdovski) எடுத்து வருகிறார்.

பாரிஸ் நகரில் வீட்டில் இருந்து மிதிவண்டி மூலம் வேலைக்குப் போகின்றவர்களின் தற்போதைய தொகையை மூன்று மடங்கால் அதிகரிக்க திட்டமிடப்படுகின்றது. 2020ம் ஆண்டளவில் பாரிஸ் நகரின் பயணிகளுள் 15 வீதத்தினர் மிதிவண்டிகளில் பயணிப்பர்.

பாரிஸ் நகரில் வடக்கு தெற்காகவும், கிழக்கு மேற்காகவும் இரு வழி பாதுகாப்பான மிதிவண்டி விரைவுப் பாதைகள் அமைக்கப்படவுள்ளன

அத்துடன் பஸ் பயணிக்கும் சிறு வீதிகளிலும் மிதிவண்டிகளிற்கான இரு வழிப்பாதைகள் அமைக்கப்பட உள்ளன. மேலும் உலகின் மிக அழகான வீதியென வர்ணிக்கப்படும் பாரிஸ் சோம்சலிசே (Champs-Elysées) வீதியிலும் மிதிவண்டிப்பாதை அமைப்பதற்கான திட்டமும் பரிசீலனையில் உள்ளது.

**ஒரு பாரிஸ் நகரவாசியின் வதிவிடம்**
வெறும் 5 மீட்டருக்கு 6 மீற்றர் கூடுதான். அதாவது 31 சதுர மீட்டர்கள். இது பாரிஸ் புறநகர்ப்பகுதிகளில் 42 சதுர மீற்றராக மாற்றம் பெறுகிறது.

பாரிசில் 99 சதவீதமானவர்கள் தொடர்மாடிக்கட்டிடங்களிலேயே வாழ்கிறார்கள். 25 சதவீதத்துக்கும் அதிகமானவர்களுக்கு சரியான வதிவிடங்கள் இல்லை.



பாரிசில் ஒரு தொடர்மாடியின் (apartment) சராசரி அளவு 59$m^2$. இது இரண்டு அறை, குசினி, கழிவறை என வகுக்கப்படுகிறது. இங்கு இருவருக்குரியது. பாரிஸ் தவிர்த்த பிரான்சின் மற்றைய நகரங்களில் இதே இரண்டு பேர் 94$m^2$ ல் வசகிறார்கள்.



## ஜோன்-மரி-லு-பென் / மறின் லு பென்

# அரசியல் உறவில் விரிசல்!

**தேசியத்திற்கான** முன்னுரிமை, மதச்சார்பின்மை, குடிவரவைக் கட்டுப்படுத்தல், உள்நாட்டு பாதுகாப்பு எனும் முழக்கங்ளோடு பிரான்சின் தேசிய முன்னணி கட்சி 1972ம் ஆண்டில் தீவிர வலதுசாரியான ஜோன்–மரிலு பென் (Jean-Marie Le Pen) என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது.

1928 ஆனி 20 இல் பிறந்த இவருக்கு தற்போது 86 வயது.

1972 – 2011 காலப்பகுதிவரை கட்சியின் தலைவராக இருந்த இவர் தனது முதுமையைக்கருத்திற்கொண்டு தனது மகளிடம் தேசிய முன்னணியின் தலைமைப் பொறுப்பைக் கையளித்தார்.

2014ம் ஆண்டில் இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றிய தேர்தலில் பிரான்சில் உள்ள 74 தொகுதிகளுள் 24 இடங்களைக் கைப்பற்றி தேசியமுன்னணிக்கட்சி முன்னிலைக்கு வந்தது.

2015ம் ஆண்டில் இடம்பெற்ற மாவட்டசபை தேர்தலில் முதற்சுற்றில் ஆளும்கட்சியான சோசலிசக்கட்சியை 3ம் இடத்துக்கு பின்தள்ளிவிட்டு தேசிய முன்னணி இரண்டாம் இடத்தைப் பிடித்துக்கொண்டது.

கட்சியின் அபரீத வளர்ச்சியைக்கண்டு மயங்கிய ஜோன்–மரி லு பென் மீண்டும் கட்சியின் தலைவராக தீவிரமுயற்சியெடுத்துவருகிறார் என அரசியலாளர்களால் அவதானிக்கப் பட்டது. இது தகப்பன் மகளிற்கிடையிலான அரசியற் போட்டியாகவும் உருவெடுத்துள்ளது.

86 வயதைத்தாண்டிய தகப்பன் கட்சித்தலைமைக்கு மீண்டும் வருவதை விரும்பாத மகள் கட்சியின் உள் விசாரணைக்கு அவரை அழைத்துப் பேசியுள்ளார். தொடர்ந்து அவர் கட்சியிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார். மகள் மறின் லு பென் தலைமையிலான கட்சியின் அபார வளர்ச்சி தொடர்ந்தும் மகளே கட்சித்தலைவராக நீடிக்க வழிவகுக்கும் என அரசியல் ஆய்வாளர்களால் எதிர்வுகூறப்படுகிறது.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# தீயணைப்பு படையினரையும் கவர்ந்துகொண்ட bluecar

**நூறு சதவீதம்** மின்சாரத்தில் இயங்கும் Blue கார்களை பாரிஸ் தீயணைப்புப் படையினர் பயன்படுத்தவுள்ளனர். 2007ல் அறிமுகமாகி பல பரீட்சார்த்தங்களுக்குப் பின்னர் 2013ல் பொது விற்பனைக்கு அனுமதிக்கப்பட்ட Bluecar கள் 2011 . முதல் Autolib சேவைக்காக மட்டும் உபயோகப்படுத்தப் பட்டன. தற்போது Pompiers de Paris யையும் ஈர்த்துள்ளது. தாம் எதிர்கொள்ளும் அதீத எரிபொருள் செலவீனங்களைக் கட்டுக்குள் கொண்டுவரவும் சூழல் மாசடைவைக் கருத்தில் கொண்டும் Bluecar கள் பக்கம் தாம் திரும்பியுள்ளதாக தெரிவித்துள்ள பாரிஸ் தீயணைப்புப் படையினர் தற்போது இக்கார்கள் அலுவலக சேவைகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்படவுள்ளன எனவும் தெரிவித்துள்ளனர். லித்தியம் மின்கலன்கள் ஒரு முறை சார்ஜ் செய்தால் 250 கிலோமீட்டர் வரை பயணிக்கக் கூடியவை, அத்துடன் வேகமும் மணிக்கு 130 கிலோமீற்றர் வரை செல்லக்கூடியது. மற்றும் லித்தியம் மின்கலன்களின் நீண்ட ஆயுளும் (400000 கிலோமீற்றர்) Bluecar களின் பலமாகும். தற்போது அலுவலக சேவைகளுக்காக உள்ள 500 வாகனங்களை மாற்றுவதற்கான திட்டத்தை Pompiers de Paris முன்னெடுத்துள்ளது.

## பிரான்சில் 13.7 மில்லியன் ஓய்வூதியர்

பிரான்சில் ஐந்து பேருக்கு ஒருவர் ஓய்வூதியம் பெறுபவர்களாக உள்ளனர். 66 மில்லியன் மக்களில் 13.7 மில்லியன் மக்கள் ஓய்வூதியம் பெறுகின்றனர். இது 31 டிசம்பர் 2014 இல் உள்ள நிலைமையாகும்.

இவர்களுள் 61 இலட்சம் ஆண்களும் 76 இலட்சம் பெண்களுமாவர். ஓய்வூதியம் பெறுபவர்கள் சராசரி வயது 73.6 ஆண்டுகளாக உள்ளது. இவர்கள் பெறும் சராசரி ஓய்வூதியம் 1032 யூரோக்கள் பிரான்ஸ் மக்களின் சராசரி வாழ்வுக்காலம் தற்போது 82.5 ஆண்டாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது பிரான்சில் வருடாந்தம் இறக்கும் மக்களின் சராசரி வயதாகும்.






# மொடல் அழகிகளுக்கு புதுப்பிரச்சினை!



ஆடை வடிவமைப்பாளர்கள் தங்கள் புதிய படைப்புகளை அறிமுகப்படுத்தும் பஷன் நிகழ்வுகளில் பூனை நடை அழகுப் பெண்களின் தோற்றம் மில்லிமீற்றர் பிசகாது இருக்க வேண்டியது கட்டாயம். உயரம், எடை, தோற்றம் என தலை முதல் கால் வரை கட்டுக்கோப்புக்குள் இருக்க வேண்டும். ஒவ்வொரு அங்க அசைவுக்குமான பிரத்தியேக முறைகளையும் கற்றுத் தேர்ந்திருக்க வேண்டும்.

போட்டிகள் அதிகரித்து விட்ட சூழலில் மொடல் அழகிகள் தங்களின் எடையை மேலும் மேலும் குறைத்து மெலிதாகத் தோற்றுவிக்க கடினமான உணவு முறை–களைக் கடைப்பிடிக்கின்றனர். நீர் இன்றி ஆகாரமின்றி இயற்கைக்கு ஒவ்வாத முறைகளால் ஒரு கட்டத்துக்கு மேல் பசியற்றவர்களாக மாறிவிடுகின்றனர். பசியின்மை என்பது ஒரு நோய். அது அவர்களை மரணங்களில் தள்ளி விடுகின்றது.

இந்த "சீரோ சைஸ்" தோற்றத்துக்காக இளம் பெண்கள் கொடுக்கும் விலை அதிகமானது. இந்நிலையை உலகெங்கும் பல பெண்கள் அமைப்புகளால் தொடர்ந்து எதிர்க்கப்பட்டு வருகின்றது. பிரான்சில் பசியின்மை நோய்க்கு வருடாந்தம் 30 முதல் 40 ஆயிரம் வரையான இளம் பெண்கள் பலியாகி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரான்சில் எழுப்பப்பட்டு வந்த எதிர்ப்புக் குரல்களுக்கு சுகாதாரத்துறை அமைச்சர் Marisol Touraine செவி சாய்த்துள்ளார். அவரது துரிதமான செயற்பாடுகள் சட்ட மூலமாக வடிவம் பெற்றுள்ளது. அதீத எடை குறைவான மொடல் பெண்களை Fashion show க்களில் பயன்படுத்தக்கூடாது எனத் தடை உத்தரவை பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது. அத்துடன் இப்பெண்களின் உணவு முறைகளும், எடையும் சுகாதாரத்துறையால் கண்காணிக்கப்படவுள்ளது எனவும் மீறும் மொடல் அழகி முகவர்கள் 75 ஆயிரம் முதல் 6 மாதச் சிறை வரை தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் சுகாதாரத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.



உங்கள் வாகனத்தேவைகளுக்கு
தொடர்புகொள்ளுங்கள்!

● விமானநிலையம்
● லூட்ஸ் திருத்தலம்
● பாரிஸ் சுற்றுலாத் தலங்கள் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான வாகனசேவை.
Tél.: 06.17.57.98.30


ஆர்.ரி.எம். பிறதேர்ஸ்
பெருமையுடன் வழங்கும்
23வது இசைத் தென்றலும்
12வது இசைபாடும் இரவும்
18.10.2015




இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

**ORT FRANCE, AVEC LA PARTICIPATION DE IMTC FRANCE , PRESENTE**

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்-பிரான்ஸ், உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம்-பிரான்ஸ் இணைந்து நடாத்தும்

# 18 ème GRANDE RENCONTRE SPORTIVE TAMOULE

## Une journée festive...!!!

# தமிழர் விளையாட்டுவிழா 2015

இயந்திர வாழ்விற்கோர் இடைவெளி
முழுநாட் பொழுதை மகிழ்வாய்க் கழித்து
அன்பாய்க் கூடி அகமகிழ்ந்து
நாளைய சந்ததி நலமாய் வாழ
ஒன்றாய்க் கூடி தமிழர் வேரிற்கு நீர் ஊற்றுவோம்
வாருங்கள்! வாருங்கள்!! வாருங்கள்!!!

தமிழர் விளையாட்டு விழா 2015
மிகப் பெரிய "லு புசே" பூங்கா மைதானத்தில்

**Dimanche 12 Juillet 2015**

09h00 jusqu'à 20h00

**L'Aire des Vents (Dugny)**
**Parc Départemental de la Courneuve**

Pour se rendre à l'aire de jeux:
Autoroute: A1 Sortie LE BOURGET direction DUGNY Centre
RER - B: LE BOURGET, AUTOBUS 133 Arrêt: LA COMETE

<u>வர்த்தகப் பெருமக்களுக்கான அறிவித்தல்</u>
தமிழர் விளையாட்டு விழா மைதானத்தில்
தங்கள் வர்த்தக விளம்பர வியாபாரக்
கடையை நிறுவ விரும்பினால்
தமிழர் புனர்வாழ்வுக் கழக காரியாலயத்துடன்
20-06-15 ற்கு முன் தொடர்புகொள்ளவும்.
நன்றி

தாயக விளையாட்டுக்கள்
தலையனைச் சண்டை
தாச்சி, கயிறிழுத்தல்
முட்டி உடைத்தல்
சறுக்குமரம் ஏறுதல்,
சிறுவர் விளையாட்டுக்கள்
கலைப்படைப்புக்கள்
இன்னும் பல சனரஞ்சன
நிகழ்வுகளுடன்
தமிழர் விளையாட்டு விழா 2015



ORT France, 75 rue Philippe de Girard 75018 Paris, Tel : 01 40 38 30 74 - E.mail : trofr@hotmail.com - www.trofr.com

லாச்சப்பலில்... Gooday

Gooday

## Centre de Beauté



- மணப்பெண் அலங்காரம்
- மருதாணி அலங்காரம்
- நக அலங்காரம்
- கண்புருவம் வடிவமைத்தல்
- பேசியல்,
- தலைக்கான ஒயில் மசாஜ்

போன்ற அனைத்து

அழகுசேர் வேலைகளிற்கும்..

உங்கள் அழகுக்கு

அழகு சேர்க்க

*எம்மை நாடுங்கள்!*



மணப்பெண் அலங்காரம்

உங்கள் இல்லங்களுக்கு வந்தும்

செய்துதரப்படும்

**Tél.: 01 42 05 78 67**

**208 Bis, Rue du Fbg St-Denis, 75010 Paris**

('சிங்கப்பூர் சில்க்' இற்கு அருகாமையில்)



# வைன் தயாரிப்பில் பிரான்ஸ் தொடர்ந்தும் முதலிடம்!

திராட்சைப்பழத் தோட்டங்கள் நிறைந்த பூமியான பிரான்ஸ் வைன் தயாரிப்பில் தொன்மையான பாரம்பரியமும் நீண்ட வரலாறும் கொண்டது, இன்று வைன் தயாரிப்பதற்கான திராட்சைத் தோட்டங்களின் இருப்பில் பிரான்சை சீனா பின்தள்ளிவிட்டது.

1021 மில்லியன் ஹெக்ரர் திராட்சைத் தோட்டங்களுடன் ஸ்பெயின் முதலாவது இடத்திலும், 799 மில்லியன் ஹெக்ரர் தோட்டங்களுடன் சீனா முன்னிற்க பிரான்ஸ் 792 மில்லியன் ஹெக்ரர்களுடன் பின்தள்ளப்பட்டுள்ளது.

2000ம் ஆண்டு உலகளவில் 3.9 சதவீத தோட்டங்களையே வைத்திருந்த சீனா இன்று 11 சதவீத தோட்டங்களை கைவசம் கொண்டுள்ளது. இது ஒரு ஆச்சரியமான வளர்ச்சி வீதம் எனப் பாராட்டிய பிரான்ஸ் சர்வ தேச வைன் ஒருங்கிணைப்பு மையம் ஐரோப்பாவில் திராட்சைத் தோட்டங்கள் அழிந்து கட்டிடங்கள் பெருகி வருகின்றன என கவலை தெரிவித்துள்ளது. இருப்பினும் குறைவான தோட்டங்களுடன் உலகத்தின் முன்னணி வைன் தயாரிப்பாளர்களாக பிரான்சே சிம்மாசனத்தில் அமர்ந்துள்ளது. வருடத்துக்கு 46.6 மில்லியன் ஹெக்ரோ லீட்டர் வைன் தயாரிக்கப்படுகின்றது. இது பிரான்சின் செயற்றிறனுக்கான பெருமையே.

உலகளவில் வைன் நுகர்வில் முதலாவது இடத்தில் 30.7 மில்லியன் ஹெக்ரோ லீட்டருடன் அமெரிக்கா முன்னிலையிலுள்ளது. தொடர்ந்து பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி எனப்பட்டியலிடப்படுகின்றது. இங்கு சீனா ஐந்தாவது இடத்தைத் தக்கவைத்துள்ளது. ஒரு ஹெக்ரோ லீட்டர் என்பது அண்ணளவாக 1333 போத்தல் வைனாகும். பிரான்சில் வருடத்துக்கு 28 மில்லியன் ஹெக்ரோ லீட்டர் வைனை குடித்துத் தள்ளுகிறார்கள்.




**கலைப்பொக்கிசங்கள்** காட்சியகங்களுக்குள் மட்டும் முடங்கக்கூடாது. இந்த இயந்திர உலகில் அவை பார்வையாளனை நோக்கியும் நகரவேண்டிஇருக்கிறது. அண்மையில் Air France பேரூந்துகளின் பின்பகுதியில் படைப்புகளை காட்சியாக்கி பாரிஸ் வீதிகளில் வலம் வருவதை பார்த்து பாரிஸ் வியந்தது. 'Bus Expo' என அழைக்கப்படும் இக் கண்காட்சியினை பாரிஸ் நகரத்திலிருந்து விமான நிலையங்களுக்குச் செல்லும் Air France க்குச் சொந்தமான 25 பேரூந்துகளில் காண முடியும். Pop art பிரபலமான Yann sciberras முதல் கருப்பு வெள்ளை புகைப்பட படைப்பாளியான Arié Botbol ன் புகைப்படங்கள் வரை அலங்கரித்திருந்தன. அத்துடன் படைப்பாளிகளுடனான சந்திப்புகளும் பேரூந்திலேயே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்த முதலாவது நிகழ்வான நடமாடும் கலைக் கண்காட்சி பாரிசில் 3, 5 மில்லியன்வரையான மக்களின் கவன ஈர்ப்பை பெற்றது.

## A1 நெடுஞ்சாலையில் வாகன நெரிசலைத் தவிர்க்க பிரத்தியேக தடம்!

**மக்கள் தொகை அதிகரித்துவரும் நகரங்களில்** வாகனங்களின் தொகையும் அதிகரித்து வருவதில் எந்தவொரு ஆச்சரியங்களுமில்லை. வீதிகளை வாகனங்கள் சரியான முறையில் பகிர்ந்து பாவனைப்படுத்த வேண்டியது கட்டாயமானது. குறிப்பாக பொதுப் போக்குவரத்து சூழல் மாசடைவைக் கட்டுக்குள் கொண்டுவரவும், வீதிகளில் அதிகரிக்கும் வாகனங்களைக் குறைக்கவும் பொதுப் போக்குவரத்தை அரசு ஊக்குவித்து வருகிறது. பாரிசிற்குள் பல பகுதிகளில் பொதுப் போக்குவரத்து குறிப்பாக பேரூந்துகளுக்கு பிரத்தியேக பாதைகள் இருந்தாலும் விமான நிலையங்களுக்கு விரையும் பேரூந்துகள் Autoroute களில் வாகன நெரிசலில் சிக்கித்தவிப்பதும் தவிர்க்க முடியாதவொன்றாக உள்ளது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு




போக்குவரத்துத்துறை அமைச்சர் புதிய சில மாற்றங்களை அறிவித்துள்ளார். A1 நெடுஞ்சாலையில் குறிப்பிட்ட பகுதியான La Courneuve க்கும் Stade de france க்கும் இடையிலான 5 கிலோமீற்றர் பகுதியில் பஸ்களுக்கும் ரக்சிகளுக்குமான பிரத்தியேக தடம் பாவனைக்கு வருகின்றது. இத்தடத்தில் காலை 6.30 மணி முதல் 10 மணி வரை வேறு வாகனங்கள் செல்ல முடியாது மீறினால் 135 யூரோக்கள் அபராதம் என விதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் சரியாகப்பின்பற்றப்படும் பட்சத்தில் மணிக்கு 900 மேலதிக பயணிகள் இப்பொதுப்போக்குவரத்து மூலம் பய–னடைவர் என கணிக்கப்படுகிறது. தொடர்ந்து A6 ல் Orly விமான நிலையம் நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலையிலும் இத்தகைய திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# பிரான்ஸ் Collège கல்விமுறை மாற்றங்கள்

கல்வி அமைச்சர் Najat Vallaud - Belkacem அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள Collège கல்விமுறை மாற்றங்கள் தொடர்பான விவாதம் தற்போது பிரான்சில் அதிக கவனம் பெற்றுள்ளது.

இத்திட்டம் பிரான்சின் 3.2 மில்லியன் Collège மாணவர்களின் கல்வி முறையில் மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளது.

1. இது வரை Collège ல் தெரிவுப்பாடங்களாக இருந்து வந்த லத்தீனும், கிரேக்கமும் நிறுத்தப்படவுள்ளன. தொன்மையான மொழிகளான இவற்றை 20 சதவீதத்தினர் மட்டுமே தெரிவு செய்கின்றனர். அதிலும் Lycée க்கு செல்லும் 5 சதவீதத்தினரே தொடர்கின்றனர்.

2. «Les classes bilangues»; 6ème முதல் விரும்பினால் இரண்டு வெவ்வேறு மொழிகளைக் கற்கக்கூடிய இவ்வகுப்புகளும் நிறுத்தப்படவுள்ளன. இதனையும் 16 சதவீதத்தினர் மட்டுமே தெரிவு செய்கின்றனர்.

இந்த இரண்டு முறைகளும் முற்றாக நீக்கப்படுகிறது. இவற்றிற்குப் பதிலாக பல்துறை நடைமுறைக்கல்வி தெரிவு வகுப்புகளாக அல்லாமல் அனைவருக்கும் தொன்ம மொழிகள், கலாச்சாரங்கள் வாழ்க்கை முறைகள் தொடர்பான கற்பிதமாக மாற்றம் பெறுகின்றது.

இரண்டாவது அனைவருக்கும் ஆங்கிலத்துடன் இரண்டாவது கட்டாய மொழி பயிற்றுவிப்பு இரு வெளிநாட்டு மொழிகள் தற்போது 4ème ல் இருந்தே பயிற்றுவிக்கப்படுகிறது. இது மாற்றம் பெற்று 5ème முதல் கட்டாயமாகின்றது.

பிரான்சின் கல்வி அமைப்பில் Collège மிகவும் பலவீனமான நிலையில் உள்ளது, உலகப்பரப்பில் எமது குழந்தைகளின் கல்வித்தரத்தை உயர் நிலைக்கு கொண்டு வரவும் பாகுபாடற்ற அனைத்து மாணவர்களும் கல்வியில் வெற்றி பெறவுமே இந்த மாற்றங்களை கையிலெடுத்துள்ளேன் என்கிறார் கல்வி அமைச்சர். இத்திட்டத்தை முன்னகர்த்த கல்வி அமைச்சருக்கு தகுந்த ஆதரவு கொடுக்க வேண்டுமென பிரான்ஸ் அதிபர் வேண்டுகோள் விடுத்ததோடு தனது முழுஆதரவையும் வழங்கியுள்ளார். ஆளும் கட்சியினால் இச்சீர்திருத்தத்திட்டம் வெகுவாக ஆதரிக்கப்பட்டாலும் மற்றைய அரசியல் கட்சிகளால் குறிப்பாக UMP கட்சியினரால் வெகுவாக விமர்சிக்கப்பட்டு வருகின்றது.

முக்கிய மாற்றங்கள் இவை தானென்றாலும் கற்பித முறைகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் நேர அட்டவணை மாற்றங்கள் புதிய ஆசிரிய வரவுகள் என பல கிளை மாற்றங்களுடன் திட்டம் நிட்சியாகவே உள்ளது. விவாதங்கள் வலுப்பெற்று திட்டம் ஒப்புதல் பெறும் பட்சத்தில் 2016 முதல் அது அமுலுக்கு வரும்.

சாதாரணமாகவே கல்வித்துறையில் பெரிய மாற்றங்களை விரும்பாத பிரான்ஸ் மக்கள் இம்முறையும் 61 சதவீதத்தினர் இவையெல்லாம் தேவையில்லாத மாற்றங்கள் என முன்மொழிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# சாதனைபடைத்த பிக்காசோ ஓவியம்



சாதாரணமாகவே பிக்காசோ, வான்கோக், Francis Bacon, Gustav Klimt, Pierre-Auguste Renoir போன்ற பிரபல ஓவியர்களின் கலைப்படைப்புகள் விற்பனைக்கு வந்தால் அவை பல மில்லியன் யூரோக்களுக்கு ஏலமாவது ஒன்றும் புதினமில்லை..

இம் முறையும் கடந்த மே மாத ஏலத்தில் விற்பனையான பிக்காசோவின் Les Femmes d'Alger (version O) படைப்பு 179.3 மில்லியன் டொலர்களுக்கு விற்பனையாகியிருக்கிறது. விற்பனைச்சாதனையில் முன்னிலை வகித்த Francis Bacon ன் Trois études de Lucian Freud (142.4 மில்லியன் டொலர்) ஓவியத்தைப் பின்தள்ளியுள்ளது.

1955ம் ஆண்டு பிக்காசோவினால் வரையப்பட்ட இவ் ஓவியம் A முதல் O வரை வரையப்பட்ட ஒரு தொடரின் இறுதிவடிவம் என்பதும் இது 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரான்ஸ் ஓவியர் Eugène Delacroix இன் படைப்பின் தளுவலே என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஏலத்தில் அடிப்படை விலையாக 100 மில்லியன் யூரோக்கள் வரையறுக்கப்பட்டிருந்தது வெறும் 11 நிமிட ஏலத்தில் 179.4 மில்லியனாக உயர்ந்து கைமாறியுள்ளது. விற்றவர் இப்படைப்பை 1997ம் ஆண்டு 32 மில்லியன் டொலருக்கு வாங்கியிருந்தார்.
சிற்பங்களில் சுவிஸ் சிற்பக்கலைஞர் Alberto Giacometti ன் L'Homme au doigt 141.28 மில்லியன் டொலர் விற்பனைச் சாதனையுடன் முன்னிலையில் உள்ளது.

தற்போதைய உரிமையாளரின் அடையாளங்கள் இன்னமும் வெளியிடப்படவில்லை. இருப்பினும் பல மில்லியனுக்கு ஏலம் போகும் காலத்தால் அழியாத இப்படைப்புகள் கறுப்புத்தங்க விற்பனையாளர்களான மத்தியகிழக்கு நாடுகளிலும் சீனாவிலும் தஞ்சம் புகுகின்றன.



ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
- பாரிஸ் -
17. 06.2015
நயினைநாகபூசணி அம்பாள்
உற்சவ ஆரம்பம்

பிரான்ஸ் பழைய மாணவர்
சங்கங்களின் ஒன்றியத்தின்
அங்குரார்ப்பணக்கூட்டம்
24.05.2015

அல்லையூர் செய்திகளை அறிய..
www.Allaiyoor.com

சங்கீதா அச்சகம் 01.44.72.08.94


Hôtel - Restaurant
AU VIEUX LOURDES
உங்களை அன்புடன் வரவேற்கின்றது
புனித லூர்து நகரில்
தங்குமிட வசதிகளுடன் கூடிய உணவகம்
52, Rue du Bourg - 65100 Lourdes
Tél.: 05 62 94 35 38 - Port : 06 11 49 26 08 (Soori)
www.vieuxlourds.com


Gare du Nord / La Chapelle லில்
First Best
First & Best
CHANGE
Meilleurs Cours – Best Rates Meilleurs Cours – Best Rates
உங்களுக்கு மகிழ்ச்சிதரும் விலையில்
உள்நாட்டு வெளிநாட்டுநாணயங்களை
மாற்றிக்கொள்ள நாடுங்கள்!
எம்மிடம் மலிவு விலையில்
தங்க நாணயங்கள்
பெற்றுக் கொள்ளலாம்
வெளிநாட்டு பணப்பரிமாற்று சேவை
MoneyGram. Money Transfer
Sigue
MONEY TRANSFER
Ria WORLDWIDE MONEY TRANSFER
Bureau de Change
CHANGE + OR
CHANGE
EXCHANGE
வாரத்தில் 7 நாட்களும்
காலை 9 மணி முதல்
இரவு 9 மணி வரை
திறந்திருக்கும்
La Chapelle
Gare du Nord
Magenta
First & Best CHANGE
140, Rue La fayette - 75010 PARIS (M°: Gare du Nord / La Chapelle)
Tél./Fax: 01.44.72.03.15


BABY பலூன் டெக்கரேஷன்
Ballon Decoration
Tel. 0613062029 / 0781797957
Tel : 0139808523 / 0613062029 / 0601886182.
e.mail: baby.ballon@live.fr
htpp:/www.facebook.com/ballon.pakianathan



# பிரான்சுவா ஹொலந்தின் மூன்றாண்டு காலம்!

6 மே 2012ல் பிரான்சுவா ஹொலந் 51.6 வீத வாக்குகளைப் பெற்று பிரான்ஸ் குடியரசின் 24வது ஜனாதிபதியாக பதவியேற்றார். இதன்மூலம் 17 வருடங்களின் பின்னர் பிரான்சின் ஆட்சிமாற்றம் இடதுசாரிகளின் கைக்கு மாறியது.

பிரான்சுவா ஹொலந் "இப்போதிருந்தே இந்த மாற்றம்" (Le changement, c'est maintenent) என்ற சுலோகத்துடன் தேர்தலில் போட்டியிட்டார். ஆரம்பத்திலிருந்தே தனது தேர்தல் வாக்குறுதி களை நடைமுறைப்படுத்த ஆர்வத்துடன் செயற்பட்டார்.

வெற்றி பெற்ற பின்னர் ஆனி 2012ல் ஒருபால் திருமணங்களுக்கும், அவர்கள் குழந்தைகளை தத்தெடுக்கவும் வழிசெய்யும் சட்டமூலங்களை முதலில் கொண்டுவந்தார்.

தொடர்ந்து கல்வியில் முக்கிய மாற்றங்களைக் கொண்டுவர தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பாட–சாலைகளில் மதச்சின்னங்கள் அணிவது தடைசெய்யப்பட்டதோடு, மதச்சார்பின்மையும் பேணப்பட்டது. முஸ்லிம் மாணவிகள் தலையை, முகத்தை மறைத்து முக்காடு போடுவதற்கும், "கலால்" உணவுகள் வழங்கப்படுவதற்கும் அரச பாடசாலைகளில் தடைகள் கொண்டுவரப்பட்டன.

மாலியில் இடம்பெற்ற உள்நாட்டுக்கலவரத்தின் போது விமானங்கள் மூலம் இராணுவ தளபாடங்களையும் இராணுவ வீரர்களையும் அனுப்பி யுத்த வீரனாக பரிணாமம் எடுத்து இறுதியில் தலைமை வீரனாக மாலியில் காட்சியளித்தார்.

ஜனவரி 2015ல் "சார்லி ஹெப்டோ" (Charlie Hebdo) கேலிச்சித்திர சஞ்சிகை அலு–வலகம் பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் பிரான்ஸ் நாட்டையே அதிரவைத்தது. 12 பேர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தை தொடர்ந்து 51.6 வீதமாக இருந்த பிரான்சுவா ஹொலந்தின் பிரபல்யம் 19 வீதமாக சரிந்தது. இவரின் பதவிக்காலத்தில் பொருளாதார வளர்ச்சி கீழ் முகமாகவும், நாட்டில் வேலை இல்லாத் திண்டாட்டம் பல்கிப் பெருகியும் காணப்படுகிறது.

இடதுசாரிக் கட்சிகளிடையே ஏற்பட்ட பிளவுகள் கிட்ட இருந்த கனவுகளை எட்டாக்கனிகளாய் மாற்றியுள்ளன. இவ் இறங்குமுகத்தின் தொடர்ச்சியாக இவரின் பிரதமர் மனுவல் வால்ஸ் சோசலிசக்கட்சியை பிரதிநிதித்துவம் செய்யவேண்டுமென 70 வீதமான மக்கள் கருத்துக்கணிப்பொன்றின் மூலம் கோரிக்கை வைக்கின்றனர். எனினும் இவற்றிற்கு நடுவே இந்த நூற்றாண்டின் மாபெரும் ஊர்வலம் என வர்ணிக்கப்படும் உலகத்தலைவர்கள் பங்குகொண்ட "சார்லி ஹெப்டோ" சஞ்சிகை தாக்குதலுக்கெதிரான ஊர்வலம் உலகின் பார்வை பிரான்சை நோக்கியும் அதன் ஜனாதிபதி பிரான்சுவா ஹொலந்தை நோக்கியும் இருந்ததை மறுப்பதற்கில்லை.

# TATI நிறுவனம் பணியாளர்களின் கல்வித்தரத்தை உயர்த்துகிறது!

**பிரான்சின்** ஆடை மற்றும் பல்பொருள் விற்பனை நிறுவனமான TATI மலிவு விலைக்குப் பெயர்போனது.
1948ம் ஆண்டு துனிசியாவில்(Tunisie) Jules Ouaki என்பவரால் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் நகர்ந்து பிரான்சை ஆக்கிரமித்து பார்சலோனா, போலந்து எனக் கிளைகளை விரித்து நிற்கின்றது. இன்று பிரான்சில் மட்டும் 129 விற்பனை மையங்களைக் கொண்டுள்ளது.

1982ல் Jules Ouaki மரணத்துக்குப் பின்னர் குடும்பத்தினரால் நிர்வாகம் செய்யமுடியாமல் போக 1991ல் பிரான்சின் இன்னுமொரு பன்முகக் குழுமமான Groupe ERAM ன் கைக்கு மாறியது.

மலிவு விலைதான் தாரக மந்திரம். ஆரம்பத்தில் வருட வருமானம் 20 ஆயிரம் யூரோக்களுக்குக் குறைவான 25 சதவீத பிரான்ஸ் நாட்டவரைக் கவனத்தில் கொண்டே செயற்பட்டது. இன்று மிகுதி 75 சதவீத மக்களையும் கவர்ந்திழுப்பதே எமது நோக்கம் என விற்பனை மற்றும் பொருட்களின் தரம் என மாற்றங்களை உருவாக்கியுள்ளது. 2005ன் வருட வருமானமான 132 மில்லியன் யூரோக்கள் 2013ல் 400 மில்லியனாக உயர்ந்துள்ளது.

இன்று தங்கள் 1800 பணியாளர்களுக்கும் ஒரு அரிய வாய்ப்பை TATI நிர்வாகம் அறிவித்துள்ளது. பாரபட்சமின்றி அனைவருக்கும் Baccalauréat (BAC) உயர் கல்விக்குச் சமமான பட்டப் படிப்பை பரிந்துரை செய்துள்ளது. அவரவர் கல்வித்தகுதிக்கு ஏற்ப 196 மணிநேர பயிற்சி வகுப்புகளுக்குப் பின்னர் தேர்வுக்கு அனுப்பப்படுவார்கள். மேலும் விரும்பினால் BTS Management (Bac +2) வரை தொடர முடியும். கல்வி உயர்வுக்குப் பின்னர் வேலை மற்றும் சம்பள உயர்வுகளையும் கவனத்தில் கொண்டுள்ளதாகவும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

எமது பணியாளர்களே முதன்மையான வர்கள். அவர்களை சரியான முறையில் தக்கவைத்து நிறுவனத்தின் மேல் நம்பிக்கை கொள்ள வைப்பதே எமது கடமை என்கிறது TATI நிர்வாகம்.

தமது பணியாளர்களின் இந்தப் பட்டப்படிப்பு கல்விக்காக TATI 8 மில்லியன் யூரோக்களைச் செலவிடவுள்ளது.



# சீயோன் சுவிசேஷ சபையின்
# 24 வது ஆண்டு ஆசீர்வாத அற்புதப் பெருவிழா

**காலம் : 3 ஆகஸ்ட் 2015 முதல் 9 ஒகஸ்ட் 2015 வரை**

(திங்கள் முதல் ஞாயிறு வரை)

**7,8,9** ஊழியர் Dr. போல் தினகரன் அவர்கள் குடும்பமாக வருகிறார்கள்

**வெள்ளி, சனி, ஞாயிறு**

## "இயேசு அழைக்கிறார் ஊழியர்கள்"

(3-6 ஒகஸ்ற் தலைமை சபையில் Dr.REV சுரேஸ் ராமச்சந்திரனின் வேதப்பாடங்கள் நடைபெறும்)

**7ம் திகதி** தலைமை சபையில் La Plaine Stade de France
**வெள்ளி மாலை**
**5 மணிக்கு**

**ASSEMBLÉE CHRÉTIENNE DU BON BERGER**
*215, avenue du président Wilson - 93210 La Plaine SaintDenis*
RER'B' (La Plaine Stade de France) / RER 'D' (Stade de France St.Denis)
Métro:Porte de la Chapelle இல் இருந்து பஸ் 153 5வது தரிப்பிடம் Pont de Soissons, Inter-Hôtel முன்பாக

தொடர்புகளுக்கு : 06 99 11 19 68 / 06 64 93 62 37
06 07 54 40 62 / 06 61 18 95 30 / 01 49 98 23 20

**EUROSITES LES DOCKS DE PARIS** மண்டபத்தில்
**8,9ம் திகதி சனி, ஞாயிறு**
**மாலை 4 மணிக்கு**

*50, Avenue Du Président Wilson 93200 La Plaine Saint Denis*
Bus 153, 302 : Porte De La Chappel இல் இருந்து முதலாவது Station
RER B : Stade De France La Plaine St.Denis
இல் இருந்து Bus 239 Station : Netsquare

தொடர்புகளுக்கு : 06 99 11 19 68 / 06 03 79 58 02
06 51 12 65 85 / 06 07 54 40 62 / 06 26 93 37 91 / 06 09 98 06 95





அன்பானவர்களே!
இப்படிப்பட்ட தீர்க்கதரிசி, தேவ மனிதன் ஒர் தேசத்துக்குள் வந்தால் இத்தேசம் ஆசீர்வதிக்கப்படும். ஒர் சபைக்குள் வந்தால் அச்சபை ஆசீர்வதிக்கப்படும். ஒர் சபைப் போதகர் இவரை அழைத்தால் அப்போதகர் குடும்பம், சபையும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். இவர்களின் கூட்டங்களில் வந்து பங்கு பெறும் நீங்கள் கட்டாயம் ஆசீர்வாதமாக செல்வீர்கள்

**வாருங்கள்... வாருங்கள்... இது உங்களுக்கான ஆசீர்வாத நாட்கள்**

Jésus t'aime

சகரியா 4:6

## சீயோன் சுவிசேஷ சபை
## EGLISE EVANGELIQUE DE SION

PARIS - FRANCE N°. D'ENREGISTREMENT : 1/00084

தொடர்புகளுக்கு : 06 99 11 19 68 / 06 03 79 58 02 / 06 51 12 65 85
06 07 54 40 62 / 06 26 93 37 91 / 06 09 98 06 95

Zacharie 4:6

பாரிஸ் லாச்சப்பலில்

# கோபால் அன் கோ

# GOPAL & CO

வாடிக்கையாளர் வசதி கருதி ....

**லாச்சப்பலில்...**
72, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle

**பொபினியில்...**
205, AV. JEAN JAURES,
93000 BOBIGNY.
Tram 1: La Ferme

இலங்கை இந்தியாவிற்கு
மிகக் குறைந்த விலையில்
கதைப்பதற்கு Kish Mobile!




**Tél : 09 51 56 76 52 Fax : 01 46 07 13 03**



# இரண்டாம் உலகப்போர் சில நினைவுகள்:

8 Mai 1945

**70 வருடங்களுக்கு** முன்பொருநாள் Vive la France என்று Général de Gaulle ன் கோசம் வானொலியில் குதூகலித்து ஒலித்த போது பிரான்ஸ் மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அவர்கள் ஒரு நீண்ட நிம்மதிப்பெருமூச்சை விட்டனர். 20ம் நூற்றாண்டின் மிகக்கொடுமையான துன்பியல் நிகழ்வுகளிலொன்று முடிவுக்கு வந்தது. அந்நாள் வருடந்தோறும் பிரான்ஸ் மற்றும் அதன் நேச நாடுகளால் மாண்டு போன தம்தேசத்து மக்களுக்காக கண்ணீருடன் நினைவு கூரப்பட்டுவருகிறது.

இரண்டாம் உலகப்போர் ஐரோப்பாவில் ஆரம்பமானாலும் உலகநாடுகள் அனைத்துமே அதன் தாக்கத்திற்கு உள்ளாயின. உலகின் சரிபாதி மக்கள் சுமார் 60 மில்லியன் மக்கள் மாண்டுபோயினர். இதில் மூன்றில் ஒரு பகுதியினர் URSS தற்போதைய ரஸ்யர்கள் ஆகும். இன அழிப்பு வதை முகாம்களில் மட்டும் ஐரோப்பிய வாழ் யூத மக்களில் 5 முதல் 6 மில்லியன் மக்கள் நாசிப்படைகளால் திட்டமிட்டு அழிக்கப்பட்டனர். வான் தாக்குதல்களால் பல நகரங்கள் முற்றிலுமாக தரைமட்டமாக்கப்பட்டன. பெருந்துயராக ஜப்பானின் கிரோசிமா, நாகசாகி நகர்கள் அமெரிக்காவின் அணுகுண்டுத்தாக்குதலால் முற்றாகவே அழிந்துபோயின. இன்றுவரை மனிதன் உயிர்வாழவே முடியாத சாம்பல் மேடாக அது காட்சிதருகிறது.

சில நினைவுகள்...

1 செப்டெம்பர் 1939 :
ஜேர்மன் படைகள் போலந்தின் மீது படையெடுத்தது. இரண்டு நாட்களுக்குப் பின் பிரான்சும், இங்கிலாந்தும் எதிர்த்து போரில் குதித்தன.

17 யூன் 1940 : பிரான்சில் போர் நிறுத்தம் கோரப்பட்டது

7 டிசம்பர் 1941 : Pearl Harbor துறைமுகம் மீதான ஜப்பானின் குண்டு வீச்சு – இது அமெரிக்கர்களை போரில் குதிக்கத்தள்ளியது.

20 ஜனவரி 1942 : யூதர்கள் அனைவரையும் அழிப்பதே இப்போரின் இறுதி முடிவாக இருக்கும் என நாசித்தலைமை Wannsee மாநாட்டில் அறிவித்தது.

6 யூன் 1944 : அமெரிக்காவுடன் இணைந்த பிரான்ஸ் மற்றும் நேச நாடுகளின் நோர்மன்டித் தரையிறக்கம்

30 ஏப்ரல் 1945 : கிட்லர் பதுங்கு குழியில் தன்னைத்தானே மாய்த்துக்கொண்டார்.

8 மே 1945 : ஐரோப்பாவில் போர் முடிவுக்கு வந்தது. பிரான்சின் விடுதலை

2 செப்டம்பர் 1945 : ஜப்பான் மீதான அணுகுண்டுத்தாக்குதலுக்குப் பின்னர் உலக நாடுகள் அனைத்திலும் போர் முற்றுக்கு வந்தது.


## Sachchi Education – Annamalai University

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சிறுவர்–பெரியோர் அனைவருக்கும் நுண்கலைக் கற்கை

பரதநாட்டியம் – குரலிசை – மிருதங்கம்

கீ.போர்ட் – வயலின் – வீணை – தேவாரம்

**கற்கை நெறிகள்**



- **தரச்சான்றிதழ் படிப்பு** - Grade Certificate Programmes
- **சான்றிதழ் படிப்பு** - Certificate Programmes
- **நாட்டியக் கலைமணி** - Nattiya kalaimani
- **நட்டுவாங்கக் கலைமணி** - Nattuvanga kalaimani
- **இசைக் கலைமணி** - Isai kalaimani
- **இளங்கலை** - Bachelor of Bharathanatyam/Music in Vocal/ Mruthangam/ Veena.
- **முதுகலை** - Master of Bharathanatyam/Music in Vocal/ Mruthangam/ Veena

70, rue Philippe de Girard 75018 PARIS Tél : 01 46 07 16 00

sachchithanantham@gmail.com



## நிலா

நிலாவினைப்பெற்றுக்கொள்ள..

**சங்கீதா அச்சகம்**
39, Bld. de la Chapelle - 75010 PARIS

**ரூபி அச்சகம்**
10, Rue Labat - 75018 PARIS

CHANGE MAGENTA
77, Bld. de Magenta - 75010 PARIS

ASI BOUCHERIE
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**தமிழ்ச்சோலை -பாரிஸ் 17**

Gooday
208, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**யாழ் இறைச்சிக்கடை**
6, Rue Perdonnet - 75010 PARIS

SACHI EDUCATION
70, rue Philippe de Girard - 75018 PARIS

NRS COIFFURE
5B, Av. Alexis Varagne - 95 Villiers le Bel

**ராக ஜோதி மளிகை**
C.C Pte de la Ville - 95140 Garges Les Gonesse.

**மாயவர் - மொழிபெயர்ப்பு**
7, Rue Perdonnet (M°: La Chapelle)

MGR VIDEO
5, Rue Perdonnet - 75010 Paris

SARL VARNISHA COIFFURE
111, rue de l'Ouest - 75014 Paris

**தமிழாலயம்**
19, Rue Cail, 75010 Paris

**மாலா மளிகை**
4, Place de Salengro - Garges les Gonesse

**அறிவாலயம் புத்தகசாலை**
7, Rue Perdonnet (M°: La Chapelle)

**Karan Coiffure**
203, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

SHAEE CASH & CARRY
193, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

RESTAURANT PARADISE
10, Av. Louis Aragon, Bobigny (M°: Bobigny)

**ஞானமணி பல்பொருள் அங்காடி**
218, Rue. Anatole Francy - 93 Drancy

**அம்பாள் ஸ்ரோஸ்**
192, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**தமிழ்ச்சோலை - தமிழ்ச்சங்கம்**
Le Blanc Mesnil

**அஷ்டலக்சுமி கோயில்**
1, Rue Ledru Rollin - 94600 Choisy le Roi

**கிருஷ்ணா அச்சகம்**
73, Rue Doudeauville - 75018 Paris

GADS EXO
14, Bis, rue Emile zola 93400 St.Ouen
M°: Pte de St.Ouen)


**மகிழ்ச்சியில்**
**மிகப்பெரிய மகிழ்ச்சி**
**பிறரை மகிழ்ச்சிப் படுத்திப் பார்ப்பதுதான்!**



## பிரான்ஸ் அதிபரின் கியூபா விஜயம்

அதிபர் பிரான்சுவா ஹொலந்தின் கியூபாப் பயணம் வரலாற்று நிகழ்வாக அரசியல் அவதானிகளால் கருதப்படுகின்றது. இது பிரான்ஸ் அதிபர் ஒருவரின் முதலாவது கியூபா விஜயம் என்பதும் குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சி நிரலில் இல்லாதபோதும், 20ம் நூற்றாண்டின் புரட்சியாளன் எனக்கொண்டாடப்படும் பிடல் கஸ்ரோவுக்கும் பிரான்ஸ் அதிபருக்குமிடையிலான சந்திப்பும் இடம்பெற்றுள்ளது. கியூபாவின் பொருளாதார வளர்ச்சிக்கு பிரான்ஸ் எப்போதும் துணை நிற்கும் எனவும், கியூபா மீதான சகல பொருளாதாரத்தடைகளை அமெரிக்கா தளர்த்த வேண்டும் எனவும் பிரான்ஸ் அதிபர் தெரிவித்தார். நீண்ட பகையை உடைத்த அமெரிக்க அதிபர் ஒபாமாவின் விஜயமும், தற்போதைய பிரான்ஸ் அதிபரின் பயணமும் கியூபாவில் பெரும் மாற்றங்களை கொண்டு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சீன தொழிலதிபரின் விடுமுறைப் பரிசு



சீனாவின் பிரபல கோடீஸ்வரர்களில் ஒருவரான Li Ji-nyuan தனது தொழிற்சாலைத் தொழிலாளர்கள் 6400 பேருக்கு பிரான்சில் பாரிஸ் நகரிலும் நீஸ் நகரிலும் விடு-முறையைக் கழிப்பதற்கு விமானசீட்டு முதல் ஹோட்டடல் வரை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். சீனாவின் 24வது பணக்காரனான Li Jinyuan தனது நிறுவனத்தின் 20வது வருட கொண்டாட்டத்துக்கே இந்த விடுமுறைப் பரிசை வழங்கியுள்ளார்.

ஸ்தம்பித்து நிற்பதென்னவோ பிரான்ஸ் தான். 140 ஹோட்டல்களில் அறைப்பதிவுகள், 7600 புகையிரதச் சீட்டுகள் என பிரான்ஸ் திக்குமுக்காடுகிறது. SNCF கூடுதலாக இரண்டு TGV க்களை நீஸ் நகர் நோக்கிய சேவைக்குட்படுத்தியுள்ளது. 6400 பேரில் 5400 சீனர்களும் மீதி 1000 பேர் பல்வேறு நாட்டைச்சேர்ந்தவர்களும் ஆவர். Louvre மியூசியம் முதல் பல்வேறு உல்லாசப் பிரயாணத்தளங்கள் இவர்களின் வருகைக்காக தனிமைப் படுத்தப்பட்டுள்ளன. இந்த வருகையால் பிரான்ஸ் 13 மில்லியன் யூரோக்களை வருவாயாகப் பெறவுள்ளது.

பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் Laurent Fabius, தனது Quai d'Orsay அலுவலகத்தில் Li Jinyuan அவர்களை அழைத்து உபசரித்துக் கௌரவித்துள்ளார்.



ஆசையில்லாத முயற்சியாலும்
முயற்சியில்லாத ஆசையாலும் பயனில்லை.

மகிழ்ச்சியாய் நீங்கள் வீணாக்கிய
தருணங்களெல்லாம் வீணானவையல்ல


**சங்கீதா அச்சகம் - 01.44.72.08.94**

39, Bld. la Chapelle - 75010 Paris. Métro : La Chapelle



**V.S. கிருஷ்ணபிள்ளை**

**(மாயவர்)**

**மொழிபெயர்ப்பாளர்**

சகல நீதி, நிர்வாக சேவைகளால் ஏற்றுக்கொள்ளப்படும் மொழிபெயர்ப்புகள் செய்து கொடுக்கப்படும்.

**புதிய முகவரி :**

7, Rue Perdonnet - 75010 Paris

M°: La Chapelle / Gare du Nord

[அறிவாலயம் புத்தகசாலைக்கு அருகில்]

Tél./ Fax : 09.82.24.78.98

Mob : 06.86.38.10.57




## 102 வயதில் முனைவர் பட்டம் பெற்ற மூதாட்டி

உலகத்தின் வயது கூடிய முனைவர்பட்ட மாணவியாக மூதாட்டி Ingeborg. வெற்றிவாகை சூடியுள்ளார். ஜேர்மனியின் Hambourg பல்கலைக்கழக மாணவியான இவர் 1938ம் ஆண்டு முனைவர் பட்டத்திற்கான ஆய்வறிக்கையை தயார் செய்து கொடுத்திருந்தார். பேராசிரியர்களால் வெகுவாக பாராட்டப்பட்டாலும், வாய்வழிப்பரீட்சைக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இவரின் தாய் ஒரு யூத இன வழித்தோன்றல் என்ற ஒரு காரணத்துக்காகவே மறுக்கப்பட்டது. யூதர்கள் கல்லூரிகளை விட்டு துரத்தியடிக்கப்பட்ட காலம் அது. பின்னர் தப்பியோடி அமெரிக்கா சென்று மருத்துவத்துறையில் சிறந்து விளங்கி மீண்டும் நாடு திரும்பி தற்போது ஓய்வு பெற்ற பின்னர் எதிர்பாராத விதமாக 102 வயதில் அவர் எழுதிய ஆய்வறிக்கை கையில் கிடைத்துள்ளது. மாற்றங்களுடன் திருத்தி எழுதி சமர்ப்பித்தவருக்கு வயது காரணமாக வாய்வழிப்பரீட்சையை அவரது வீட்டிலேயே நடாத்தி பட்டமும் வழங்கியுள்ளனர். 77 வருடங்களுக்குப் பின்னர் தனது கனவு நனவாகிய மகிழ்ச்சியில் மூதாட்டி Ingeborg.